உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்


e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-6 இதழ்-172

ஜனவரி 1-15 2024





## ஆயிரம் தடைவந்தாலும் காக்கும் ஐயப்பன்

## நவீனகால அரக்கர்களால் பக்தர்கள் அவதி

## ஐயப்ப பக்தியில் முக்தி பெற்ற

# முதல் கன்னிதெய்வம்

# குழந்தைகள் படிக்க...

நன்றாக படிக்கும் குழந்தைகள் திடீர் என்று படிப்பில் ஆர்வம் குறையும். அதேபோல பெரியோர்களுக்கு கடன் தொல்லை போன்றவை இருந்தால், விநாயகரின் ஆலயத்தில் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து, தேங்காய் எண்ணையையும், தன் குலத்தை காக்கும் குல தெய்வத்திற்கு பிடித்தமான விளக்கெண்னையும் ஒன்றாக கலந்து, அர்ச்சனை செய்த தேங்காயில் ஊற்றி தீபம் ஏற்றினால் பிரச்சனைகள் விலகும்.

# குழந்தைகளின் பாபங்கள் யாரைச் சேரும்

நான்கு முதல் பன்னிரண்டு வயது வரை குழந்தைகள் செய்கிற பாபங்கள் அவர்களுடைய பெற்றோரையே சேரும். பெற்றோர்கள் இல்லை எனில் காப்பாளர்களைச் சேரும். அத்தகைய பாபங்களுக்காக அவர்கள் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் செய்யும் பாவம் குழந்தைகளுக்குச் சேராது. aanmeegamalar.com

# அடிக்கடி கீழேவிழும் குழந்தைக்கு...

குழந்தைகள் அடிகடி கீழே விழுந்துக் கொண்டே இருந் தால், செங்கலால் திருஷ்டி சுற்றி, பிறகு அந்த திருஷ்டி கழித்த செங்கல்லை போட்டு உடைத்து அந்த மண்ணை பூமிதாயை மனதில் நினைத்து கொண்டு, செங்கல் மண்ணை குழந்தையின் நெற்றியில் வைத்தால் அந்த குந்தைகளுக்கு திருஷ்டியால் உண்டாகும் பாதிப்பு குறையும். aanmeegamalar.com

# மகாலட்சுமி கடாட்சம் பெருக..



சுமங்கலிகள், பூரண கும்பம், மஞ்சள், குங்குமம், திருமண், சூர்ணம், கோலம், சந்தனம், வாழை, மாவிலைத் தோரணம், வெற்றிலை, திரு விளக்கு, யானை, பசு, கண்ணாடி, உள்ளங்கை, தீபம் இவை அனைத்தும் லக்ஷ்மிக்கு மிகவும் பிடித்தவை

ராம நாமம் உச்சரிக்கப்படும் இடத்திற்கு அனுமன் தேடி வந்துவிடுவான். அங்கு அவனை கூப்பிடவேண்டிய அவசியம் கூட இல்லை. aanmeegamalar.com

அதே போல, ஸ்ரீமன் நாராயணனின் பெருமை பேசப்படும் இடத்தில், அவன் பாடல்கள் ஒலிக்கும் இடத்தில் அன்னை திருமகள் தானாகவே வந்துவிடுகிறாள்.

ஆகவே, இல்லந்தோறும், காலை வேளைகளில் வெங்கடேச சுப்ரபாதமும், மாலை வேளைகளில் விஷ்ணு சஹஸ்ரநாமமும் ஒலிப்பது அவசியம். அந்த வீடுகளில் செல்வச் செழிப்பு தாமாகவே வந்துவிடும்.

வீட்டில் நெல்லி மரம் இருந்தால் லக்ஷ்மி கடாக்ஷம் பெருகும். விஷ்ணுவின் அம்ச மாக நெல்லிமரம் திகழ்வதால் நெல்லி மரத்தில் மகாலக்ஷ்மி வாசம் செய்கிறாள். நெல்லிக் கனிக்கு ஹரிபலம் என்ற பெயரும் உண்டு.

லட்சுமி குபேரருக்கு உரிய மரமாகவும் திகழ்கிறது நெல்லி. நெல்லிமரம் இருக்கும் வீட்டில் தெய்வீக அருள் நிறைந்திருக்கும். எவ்வித தீய சக்திகளும் அணுகமுடியாது. நெல்லிமரத்தடியில் கிடைக்கும் தண்ணீர் உவர் தன்மையில்லாமல் மிகவும் சுவையாக இருக்கும்.

aanmeegamalar.com
aanmeegamalar.com
e-magazine
aanmeegamalar.com
aanmeegamalar.com

# மனித இனத்தின் ஏழுவகையான குணநலன்கள்

ஒவ்வொரு மனிதனின் இயல்பும் ஒவ்வொரு விதத்தில் மாறுபட்டிருப்பதை பார்த்திருப்போம், இதற்கு காரணம் உள்ளது.

மனிதன் ஏழு பிறவிகளை எடுப்பான் என்று சாஸ்திரம் கூறுகிறது.

இதன்படி பார்த்தால் ஒருசில மனிதர்கள் வாழ்க்கை முறை தெய்வத்திற்கு இணையான தாக இருக்கும்.

ஒருசிலரின் வாழ்க்கை முறை மிருகங்களின் செயலை ஒத்திருக்கும்,

இன்னொருவித மனித வாழ்க்கை முறை மென்மையானதாக இருக்கும் இதற்கு காரணம் இல்லாமல் இல்லை.


ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது தனது முற்பிறவியின் வாழ்க்கை முறைக்கேற்பவே மனிதப் பிறவி அமைவது இயற்கை, இதை சாஸ்திரங்களும் தெளிவு படுத்தியிருக்கிறது.

அதன்படி மனித குணங்கள் ஏழு வகையான பிறவியின் வாழ்க்கை முறையோடு ஒத்துப் போகும் என்றும் கூறப்படுகிறது.

1. இறைவன் மனிதனாக பிறப்பது ஒன்று
2. மனிதன் மீண்டும் மனிதனாக பிறப்பது இரண்டு.
3. மிருகங்கள் மனிதனாய் பிறப்பது மூன்று.
4. பறவைகள் மனிதனாய் பிறப்பது நான்கு.
5. நீர்வாழ் பூச்சிகள் மனிதனாய் பிறப்பது ஐந்து.
6. ஊர்வன மனிதனாய் பிறப்பது ஆறு.
7. தாவரங்கள் மனிதனாய் பிறப்பது ஏழு.

இதுவே மனிதனின் ஏழுபிறவியாகும்.

ஒவ்வொரு பிறவிக்கு ஏற்ப தனது முந்தைய பிறவியின் குணநலன்களுடன் மனிதன் ஒத் துப்போவான், இதில் மனோதிடம், தெய்வ நம்பிக்கை, போன்றவற்றால் தனது பிறவியின் பரிபூரணத்தை அடைய முற்பட்டு அதில் வெற்றி காண்பவனுக்கு மனிதப்பிறவி என்பது இல்லாமல் தெய்வ நிலையுடன் ஐக்கியமாகும் வாய்ப்பு அமையும்.




e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

# ஆயுளை தீர்மானிக்கும் மூச்சுக்காற்று

மூச்சு சுவாசம் என்பதை வைத்தே ஒருவரின் இறப்பை தீர்மாணித்துவிடலாம் என்று புராணங்களில் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.

இந்த வகையில் ஒரு மனிதனின் விடும் மூச்சுக்கேற்ப வாழ்க்கை காலத்தை எவ்வாறு நிர்ணயிப்பது என்பதை விரிவாக பார்ப்போம்.

க்ஷணம், துடி, வலம் நிமிஷம், காஷ்டைகலை, முகூர்த்தம், இரவு பகல், பக்ஷம், மாதம், ருது வருஷம் யுகம் கற்பம் மகா கற்பம் என்னும் அளவுகோளைப் பயன்படுத்தி சிவபெருமானே கூறியுள்ளதாக கூறப்படுகிறது.

நாசி வழியில் ஓடும் சுவாசமானது பிங்கலை வழியாக ஐந்து தினங்கள் செல்லுமாயின் மூன்று ஆண்டுகளிலும், பத்து தினங்கள் ஓடுமாயின் இரண்டு வருஷத்திலும், பதினைந்து தினங்கள் ஓடுமாயின், ஒரு வருஷத்திலும் உடல் நீப்பான் .



இரண்டு நாசிகளிலும் இருபது நாள் சுவாசம் ஓடுமாயின் ஆறு மாதத்திலும் இருபத்தைந்து தினங்கள் ஓடுமாயின் மூன்று மாதத்திலும் இருபத்தேழு நாட்கள் ஓடுமாயின் ஒரு மாதத்திலும் உயிர் விடுவான்.

வலது நாசி வழியாக ஆறு தினங்கள் சுவாசம் சென்றால் இரண்டு வருஷம் ஏழு மாதம் பதினெட்டு நாள் ஜீவிப்பான் எட்டு தினங்கள் சென்றால் இரண்டு வருஷம் நான்கு மாதம் இருபத்து நான்கு நாட்கள் வாழ்வான். ஒன்பது தினங்கள் சென்றால் ஒருவருஷம் ஏழுமாதம் பன்னிரண்டு தினங்கள் பிழைத்திருப்பான். பதினோரு தினங்கள் சென்றால், ஒன்பது மாதம், எட்டு நாட்கள் உலகில் இருப்பான் பன்னிரு தினங்கள் சென்றால், ஏழு மாதம் பன்னிரண்டு தினங்கள் பிராணனோடு இருப்பான். இருபத்து மூன்று தினங்கள் சென்றால் நான்கு மாதம் ஆறுநாட்கள் வாழ்வான்.

முப்பது தினங்கள் சென்றால் ஒருமாதம் பத்துநாள் ஜீவித்திருப்பான் முப்பத்தொரு நாட்கள் அப்படியே சென்றால் ஐந்து தினங்கள் பிழைத்திருப்பான்.

வாய்வழியே சுவாசம் செல்லுமாயின் மூன்று தினங்களில் இறுதி மூச்சை விடுவான்.

இது தான் காலச்சக்கிர கிரமம். என்று சிவபெருமான் பார்வதி தேவிக்கு கூறியதாக ஸனத்குமார முனிவர் வியாசருக்கு கூறிய மனித வாழ்க்கையை நிர்ணயிக்கும் மூச்சின் அளவுகோளாகும்.


# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com





# கோவில்களை அமைக்க முன்னோர் கடைபிடித்த நடைமுறையும்

# கோவில் கருவறையும்

மனித உடல் அமைப்பில் தலைப்பகுதி பிரதானமாக இருப்பதுபோல, ஆலயங்களுக்கு கருவறை பிரதானமாக விளங்குகிறது. அது, மூலஸ்தானம், கர்ப்பக்கிரகம் என்றும் குறிப்பிடப்படுகிறது. பொதுவாக, ஆலய அமைப்பின் பிரமாண்ட தன்மையை ஒப்பிடும்போது கருவறை என்பது அளவில் சிறியதாக அமைக்கப்படுகிறது. அவ்வாறு அமைப்பதன் பின்னணியில் பல்வேறு சூட்சுமங்களும், தேவ ரகசியங்களும் அடங்கியிருப்பதாக ஆன்மிக சான்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதாவது, சம்பந்தப்பட்ட தெய்வ மூர்த்திக்குரிய ஆகம கணக்குவழக்கு முறைகளின்படி கோவிலுக்குரிய பிரகாரங்கள், மொத்த நீளம், அகலம் மற்றும் உயரம் ஆகியவை துல்லியமாக கணக்கிடப்பட்டு அமைக்கப்படும். குறிப்பாக, பிரபஞ்ச சக்திகளை கிரகிக்கும் மையப்பகுதியாக கருவறை அமைக்கப்பட்டது.

அறிவியல் பார்வையில் கருவறை அமைப்பை விளக்குவதென்றால், பிரபஞ்சத்தில் உள்ள சக்தி அலைகள் அனைத்தும் ஒரு வகை மின்னூட்டம் பெற்ற துகள்களாக உலகம் முழுதும் இயங்கி வருகின்றன. அந்த அலை வீச்சுகள் கோவில் கருவறைக்கு மேற்புறம் உள்ள விமானம் மீது பொருத்தப்பட்டுள்ள சிறந்த மின் கடத்தியான செம்பால் செய்யப்பட்ட கலசங்களால் ஈர்க்கப்படுகின்றன.



aanmeegamalar.com

அவை கருவறைக்குள் இருக்கும் மூலவர் மூலமாக அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள செம்பு யந்திரங்களில் நிலை பெறுகின்றன. அன்றாட பூஜைகளின்போது தக்க மந்திர சப்த அலைகளின் மூலமாக ஆலயம் முழுவதும் பரவி, அனைவருக்கும் நன்மைகளை அளிப்பதாகவும் ஆன்மிக பெரியோர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலே குறிப்பிட்ட பிரபஞ்ச சக்தி அலைகளின் இயக்கம் சீராக அமைய வேண்டுமானால், தக்க பூகோள அமைப்பு உள்ள பகுதியில் கோவில்களை அமைக்கவேண்டும் என்று உணரப்பட்டது. அதன் அடிப்படையில் கோவில்கள் நிர்மாணிக்கும்போது, கருவறை அமைப்பில் பல்வேறு நுட்பமான வழிமுறைகளை நமது முன்னோர்கள் கடைப்பிடித்தனர்.

கோவில் கட்ட தேர்வு செய்யப்படும் இடத்தில் கருவறை அமைய உள்ள குறிப்பிட்ட பகுதியில் தானியங்கள் விதைக்கப்படும். மூன்று நாட்களுக்குள் அவை முளைத்தால் அந்த இடம் உத்தமமான இடம் என்றும், ஐந்து நாட்களுக்குள் முளைத் தால் அது மத்திய தரமான இ டமாகவும், அவை முளைப்பதற்கு ஆறு நாட்களுக்கும் மேல் ஆகும் பட்சத்தில் அந்த இடம் பொருந் தாது என்றும் கணிக்கப்பட்டன. மேலும், கருவறையின் தள மட்டத் திற்கு கீழே வைரம் உள்ளிட்ட நவரத்தினங்கள், ஐம்பொன் அல்லது செம்பு தகடுகள், சலித்து எடுக்கப்பட்ட சுத்தமான ஆற்று மணல் போன்றவை போட்டு நிரப் பப்படுவது வழக்கம். ஒரு சில இடங்களில் தேன் கலந்த சுண் ணாம்பு மற்றும் இதர வாசனாதி திரவியங்கள் கொண்டு அமைக் கப்பட்ட கருவறைகளும் இருப்பதாக தகவல்கள் உள்ளன.

கர்ப்ப கிரகத்தின் மொத்த அளவை 1 தண்டம் என்று கணக் கிடப்பட்டு, அதன் அடிப்படையில் ஆலயத்தின் இதர பகுதிகளுக்கான அளவுகள் கணக்கிடப்பட்டு அமைக்கப்பட்டன. உள் பிரகா ரங்கள் மற்றும் வெளிப்பிரகாரங்கள் ஆகியவை கரு வறையின் மொத்த அளவுக்கேற்ப கணக் கிடப் பட்டு கட்டமைக்கப்படும். மன்னர்கள் காலத்தில் கோவில்கள் சிற்ப சாஸ்திர முறையில் மாடக் கோவில், பெருங்கோவில், கரக்கோவில், ஞாழற் கோவில், கொகுடி கோவில், இளங்கோவில், மணிக்கோவில், ஆலக்கோவில் என்று எட்டு விதங்களாக அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
170 e-books
aanmeegamalar.com
FREE
பாருங்கள்... டவுன்லோடு செய்து படியுங்கள்...
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com



கோவிலின் கருவறை அமைப்பு சதுரம், வட்டம், முக்கோணம் என்று மூன்று விதங்களில் மட்டுமே வடிவமைக்கப்பட்டன. அதாவது, சதுர வடிவ அமைப்பானது தேவ லோகத்துடனும், வட்ட வடிவ அமைப்பு பித்ரு லோகத்துடனும், முக்கோண வடிவ அமைப்பு பூலோகத்துடனும் தொடர்பு பெற்றதாக கருதப்பட்டன. நமது பகுதிகளில் முக்கோண வடிவ ஆலய கருவறைகள் அமைக்கப்படுவதில் லை. ஆனால், ஓம்காரத்தை குறிப்பிடும் வகையில் வட்ட வடிவ கருவறைகள் ஒரு சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.



கருவறையில் உள்ள சிலா ரூபத்துக்கு அபிஷே கங்கள் உள்ளிட்ட நைவேத்தியங்கள் செய்யும் போது அவை மகத்துவம் பொருந்தியதாக மாறு வதற்கு இறை ஆற்றல்கள் காரணமாகும். கோவில் நைவேத்தியங்கள் சுவை மிக்கதாக மாறுவதற்கும், அபிஷேகம் செய்யப்பட்ட நீர் நமது உடம்பில் பட்டதும் சிலிர்ப்பை ஏற்படுத்துவதற்கும் கருவறையில் தோன்றி ஆலயம் முழுவதும் பரவும் கண்களுக்கு புலப்படாத சக்தி அலைகளே காரணமாக உள்ளன என்று பலரும் கருதுகின்றனர்.

கருவறையில் உருவாகும் சக்தி அலைகளின் இயக்கம் இடமிருந்து வலமாக அமைவதாக அறியப்பட்டுள் ளது. அதை முன்னரே உணர்ந்த நமது ஆன்றோர் பெருமக்கள் நாம் கரு வறையை இடமிருந்து வலமாக பிரதட்சிணம் செய்யும்படி அறிவுறுத்தி இருப்பது கவனிக்கத்தக்கது.

அதிகாலை நேரமான பிரம்மமுகூர்த்த சமயத்தில் கோவில்களில் பிரபஞ்ச சக்திகள் முழு அளவில் செயல்படுவதால், அந்த அலைகள் கோவிலின் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள சன்னிதிகள், கொடி மரம், பலி பீடம் போன்றவற்றிலும், கருவறையின் இயக்கத்துடனும் இணைந்து சிறப்பான சக்தி மண்டலத்தை கோவில் முழுக்கவும் ஏற்படு த்துகின்றன. அதன் அடிப்படையில் பிரம்ம முகூர்த்த காலத்தில் கோவில் வழிபாடுகளை செய்வது நமது பண்பாட்டில் முக்கியமாக கருதப்படுகிறது.

# நினைத்த காரியத்தையும், முக பொலிவையும் தரும்

# அகத்தியர் வாத சொமியமும்

# கன்னியாகுமரி பகவதி அம்மனும்

கன்னியாகுமரி அம்மனைப் பற்றி பல்வேறு புராணக் கதைகள் பல்வேறு கால கட்டங்களில் கூறப்பட்டுவந்தாலும், கன்னியாகுமரி பகவதி அம்மன் தோன்றிய வரலாறு மிகவும் சுவாரஸ்ய மானது, மேலும், இந்த அம்மன் கன்னியாகவே காட்சியளிப்பதால் இந்த அம்மனின் சக்தி ஈடுஇணையற்றதாகவும் விளங்குகிறது.

இந்த அம்மனை குறித்து அகத்தியர் வாத சொமியம் என்ற பகவதி மந்திரத்தை உருவாக்கி யுள்ளார். இந்த மந்திரத்தை அகத்தியர் கூறி யுள்ளபடி செய்துவந்தால், உடனடி பலன் கிடைக் கும் என்று அகத்தியர் அருள்வாக்காகவே கூறியுள்ளார்.

இந்த மந்திரத்தை கன்னியாகுமரி பகவதியை நினைத்து தொடர்ந்து கூறி வருபவர்களிடம் பகவதி அம்மனே அவர்களின் நாவில் குடியிருப்பதாகவும் அகத்தியர் கூறுகிறார்.

இவ்வாறு அகத்தியரால் கூறப்பட்ட மந்திரத்தை யும், கன்னியாகுமரி பகவதி அம்மனை குறித்த சுவாரஸ்யமான புராண கதையை பார்ப்போம்.

கன்னியாகுமரி என்ற பெயர் இப்பகுதியில் புகழ் பெற்ற குமரி அம்மனை மையப்படுத்தும் தல புராணத்திலிருந்து உருவானதாகும். இது பார்வதி தேவி தன்னுடைய ஒரு அவதாரத்தில் 'குமரிப்



பகவதி’ என்னும் பெயருடன் சிவனை சேரும் பொருட்டு இந்நிலப் பகுதியின் தென் கோடியில் அமைந்துள்ள ஒரு பாறையில் தவம் செய்ததாகக் கூறப்படுகிறது.

சங்க காலத்தில் கன்னியாகுமரி மாவட்ட பகுதிகளை ஆய் அரசும், வேணாட்டு அரசும் ஆண்டதற்கான ஆதாரங்கள் தொல்காப்பியத்தில் உள்ளது. தற்போதைய குமரி மாவட்ட நிலப்பரப்பில் தலைநகரத்தை கொண்டு, களக்காடு முதல் கொல்லம் வரை உள்ள நிலப்பரப்பை 9 ம் நூற்றாண்டு முதல் 17ம் நூற்றாண்டு வரை ஆட்சி நடத்தியவர்கள் வேணாட்டு அரசர்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடி யில் அமைந்திருக்கும் இந்தக் கன்னியா குமரிப் பிரதேசத்துக்கு அப்பெயர் வரக்காரணமாக இரண்டு விஷயங்களை அறிஞர்கள் ஊகங் களாகக் குறிப்பிடுகின்றனர்.

சிவபெருமானை அடைய வேண்டுமென்பதற் காக கன்னியான பார்வதிதேவி இப்பகுதியின் முனையில் நின்று தவம் செய்தமையால் ‘கன்னியாகுமரி’ என்ற பெயர் வழங்கப்பட்டு வருவதாகவும், குமரிக் கண்டம் அழிந்த பிறகு, அங்கிருந்து வந்த பெண் தனது நாயகனுக்காகக் காத்திருந்த இடம் என்ற கருத்துடன் இந்தப் பெயர் வந்திருக்கலாமெனவும் அறிஞர்கள் கூறு கின்றனர்.

முதலாவது காரணத்தின் பின்னணியிலிருக் கும் புராணக்கதை மிகவும் சுவாரசியமானது. முன்னொரு காலத்திலே, அசுரர்கள், தேவர்களை அடக்கியாண்டனர். தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கியது.

அசுர குலத்தலைவனாக விளங்கிய பாணாசுரன் மூவுலகையும் தனக்குக் கீழே கொண்டுவர எண்ணினான். விண்ணவருக்கும் முனிவர்களுக்கும் பூவுலக மாந்தருக்கும் பல்வேறு வழிகளில் தொல்லை கொடுத்தான்.

பாணாசுரனின் கொட்டத்தைத் தாங்க முடியாத பூமாதேவி திருமாலை வேண்டி நின்றாள். அவளது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த திருமாலோ, பராசக்தியை அணுகும்படி கூறினார்.

அதன்படி தேவர்கள் பராசக்தியை வேண்டி, பெரிய யாகமொன்றை மேற்கொண்டனர். யாகத் தின் முடிவில் வெளிப்பட்ட பராசக்திதேவி பாணாசுரனின் கொட்டத்தை அடக்கி உலகில் அறமும் ஒழுங்கும் நிலைபெற வழிசெய்வதாக உறுதியளித்தாள்.

அதற்காக அவள் கன்னிப் பெண்ணாக மாறி பாரதத்தின் தென் கோடிக்கு வந்து தவம் செய்யலானாள். கன்னிதேவி மணப்பருவத்தை அடைந்ததும், சுசீந்திரத்திலிருக்கும் இறைவனா கிய சிவபெருமான் கன்னியாகிய தேவி மீது காதல் கொண்டார். அவருக்கு தேவியைத்திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தன.

பிரம்மதேவனோ, அசுரர்களின் தலைவனாகிய பாணாசுரனின் மரணம் ஒரு கன்னியாலேயே நிகழ வேண்டுமென விதித்திருந்தான். இந்தத்



திருமணம் நிகழ்ந்தால், பாணாசுரனின் மரணம் சம்பவிக்காமலே போய்விடுமென உணர்ந்த நாரதரோ, திருமணத்தை எப்படி நிறுத்தலாமெனச் சிந்திக்கத் தொடங்கினார்.

கலகங்கள் விளைவிப்பதில் நாரதரைவிடச் சிறந்தவர் எவருமில்லை என்பது யாவரும் அறிந்ததோர் விஷயமே! ஆனால் நாரதர் கலகம் எப்போதும் நன்மையிலேயே முடிந்திருக்கிறது.

புதிய வியூகத்தால் தேவி – சிவபெருமான் திருமணத்தை நிறுத்த முயன்ற நாரதர் அவர்கள் இருவரையும் அணுகி, குறித்த ஓர்நாள், நள்ளிரவிலான நல்வேளையொன்றில் திருமணம் நிகழ வேண்டுமெனவும், அதற்கு ஆயத்தமாக இருக்கும்படியும் கூறினார். அதன்படி குறித்த நாளன்றிரவு சிவபெருமான் சுசீந்திரத்திலிருந்து தேவியின் இடத்தை நோக்கிப் புறப்பட்டார்.

நல்ல நேரம் தவறிவிடக் கூடாதென்பதே அவரது குறிக்கோளாக இருந்தது. போகும் வழியிலே வழுக்கம் பாறையென்ற இடத்தில் நாரதர் ஒரு சேவலாக உருக்கொண்டு உரக்கக் கூவினார்.

சேவலின் கூவலைக் கேட்ட சிவ பெருமானோ பொழுந்து புலர்ந்து விட் டது. நல்ல நேரம் தவறி விட்டது என எண்ணி மிகுந்த வருத்தத்துடன் சுசீந்திரம் திரும்பினார்.

சிவபெருமானுக்காகக் காத்திருந்த தேவி, அவர் வராததால் என்றும் கன்னியாகவே இருப்பதாக உறுதி பூண்டு மீண்டும் தவம் செய்யத் தொடங்கினாள்.

தேவியின் அழகைப்பற்றிக் கேள்வியுற்ற பாணாசுரனோ, கடுத் தவமிருக்கும் தேவியைக் காண வந்து, அவளை மணம் செய்யும் தனது விருப்பத்தைத் தெரிவித்தான். தேவியோ மறுத்துவிட, பாணாசுரன் தன் உடல் வலிமையால் அவளைக் கவர்ந்து செல்ல எண்ணித் தன் உடைவாளை உருவினான்.

இந்தத் தருணத்தை எதிர்பார்த்திருந்த தேவியும் தன் போர் வாளை வீசிப்பல நாட்கள் போர் புரிந்தாள். இறுதியில் தன் சக்கராயுதத்தால் பாணாசுரனைக் கொன்றாள். தேவர்களும் மனிதர்களும் தேவிக்கு நன்றி செலுத்தினர்.

அவர்களை வாழ்த்திய தேவி தன் தவத்தை மீண்டும் தொடர்ந்தாள். தேவி பாதம் பதித்துத் தவம் செய்த பாறை இன்னும் காணப்படுகிறது என கூறுவர். தெளிவான ஆதாரங்கள் இல்லாத போதிலும் காலம் காலமாக இந்தக் கதை கூறப் பட்டு வருகிறது.



## பகவதி மந்திரம்

பாரப்பா இன்னமொரு தீச்சைமார்க்கம்
பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
நேரப்பா பகவதியாள் தியானந்தன்னை
நேர்மையுடன் சொல்லுகிறே நிசமதாக
சாரப்பா தன்சார்பு நிலையில்நின்று
சங்கையுடன் ஓம் றீங் அங்கென்றேதான்
காரப்பா புருவ நடுக்கமலத்தேகி
கருணையுடணாயிரத்தெட்டுருவே செய்யே.

⊙ ⊙ ⊙

செய்யடா மானதமாயுருவே செய்யத்
திருயுருவாய் நின்றபகவதியாள்தானும்
மெய்யடா உனதிடமாய் நிருத்தஞ்செய்வாள்
பண்ணப்பா இதுசமயமென்று நீயும்
பகவதியாள் விபூதியை
நீதரித்துக்கொள்ளே.

⊙ ⊙ ⊙

e-magazine
aanmeegamalar.com

கொள்ளடா விபூதியை நீதரித்துக்கொண்டு
குணமாகப் பகவதியைத்தியானம் பண்ணி
நில்லடா உன்முகங்கண்டோருக்கெல்லாம்
நீங்காத பாவமெல்லாம் நீங்கிப்போகும்
சொல்லடா உன்வசனம் நன்மையாகும்
சோதிதிருப்பகவதியாள் சுருக்கினாலே
அல்லடா உன்மனதை நோகப்பண்ணும்
அவர்கள்குடி செந்தீயிலழுந்துப்பாரே.

– அகத்தியர் பரிபூரணம்– 1200

## பொருள்

பகவதியின் தியானத்தை சொல்கிறேன் கேள்,

மனஓர்நிலையோடு புருவமையத்தில் மனதை குவித்து ''ஓம் ரீங் அங்'' என்று

1008 உரு செபிக்க மந்திரம் சித்தியாகும். இம்மந்திரதை சித்தி செய்தவரின் உள்ளத்தில் பகவதி இருந்து இவர்கள் செய்யும் சகல காரியங்களும் இவர்களுக்கு சித்தியாகும்படிசெய்வாள்.

விபூதியை பூசிகொண்டு இம்மந்திரத்தை தியானம் பண்ணி செல்ல உன் முகம் பார்க்கும் யாவரின் பாவங்களும் விலகிவிடும். நீ சொல்வதெல்லாம் பலிக்கும். உனது சகலபாவங்களும் விலகிவிடும்.

உன் மனதை எவனாவதுநோகடித்தால் அவன் குடும்பம் அழிந்து போய் விடும் என்கிறார் அகத்தியர்.



அழகுராஜா

மேலும் அகத்தியர் தனது வாதசொமியம் என்னும் நூலிலும் இம்மந்திரத்தை பற்றி சொல்லிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மந்திரத்தினால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை. சகலமும் சித்தியாகும். செல்வம் பொழியும்.

எடுத்த காரியமெல்லாம் ஜெயமாகும். நினைத்தபடி முடியும். ஆபத்து வராது, வல்வினைகள் அகன்றுவிடும். இம்மந்திரம்

கோடானகோடி பூசைசெய்ததற்கு ஒப்பாகும் என்று வாதசொமியத்தில் கூறியுள்ளார் அகத்தியர்.

– முதன்மை
செய்தியாளர்
அழகுராஜா 9994162182

## தேவியருடன் பெற்றோருக்கு பூஜை

திருச்சி மாவட்டம் வயலூரில் உள்ள முருகன், தேவியரான வள்ளி – தெய்வானை இருவருடன் சேர்ந்து, இத்தல சிவன் – பார்வதிக்கு பூஜை செய்கின்றனர். வேறு எங்கும் இது போன்ற அமைப்பு இல்லை.

## நினைத்ததை நிறைவேற்றும் பாரியூர் அம்மன்



கோபிச் செட்டிப் பாளையம் பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது, பாரியூர் அம்மன் கோயில். இங்கு, இரண்டு விசேஷ அம்சங்கள் உண்டு. ஒன்று பூ வைத்து வேண்டுதல், மற்றொன்று குண்டம் திருவிழா. குண்டம் (தீமிதி) திருவிழாவில் (சித்திரை மாதம்) லட்சக் கணக்கில் பக்தர்கள் பங்கு பெறுவர். இந்த அம்மனுக்கு அர்ச்சனை செய்து நலிந்தவர்களுக்கு அன்னதானம் செய்தால், நினைத்த காரியம் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

# ஆன்மிகத் தகவல்களை

**எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்**

**ஆன்மிகமலர்** மெயில்

**புத்தகத்தில்** (e-book)

**வெளியிட்டு வருகிறோம்...**

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த

**172** க்கும் மேற்பட்ட

**இதழ்களை**




## aanmeegamalar.com

**இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.**

# வருணா கங்கா சங்கமத்தில் நீராடி, வருணா சங்கமேஸ்வரரை வழிபட்டால்

# அனைத்து விதமான செழிப்பும் கிடைக்கும்

e-magazine
aanmeegamalar.com

தற்போது அசி காட் மிகவும் பரந்த பகுதி மற்றும் மிகவும் அழகான தோற்றத்தை வழங்குகிறது. பல பக்தர்கள் இந்த இடத்திற்கு வருகை தருகின்றனர், மேலும் நான்கு சக்கர வாகனங்கள் கங்கைக்கு அருகில் கொண்டு செல்லக்கூடிய ஒரே இடம் மற்றும் வாகன நிறுத்துமிடமும் உள்ளது.

ஆன்மீக முக்கியத்துவத்தின்படி, அஸி கங்கா சங்கம் பகுதி, இன்றைய துளசி கட்டம் வரை உள்ள அளவிற்கு பரந்து விரிந்துள்ளது.

பஞ்ச கட்ட பிண்டம் (அசி, தசாஸ்வமேதம், மணிகர்ணிகா, பஞ்ச கங்கா மற்றும் வருணா) மேற்கொள்ளும் தென்னிந்திய யாத்ரீகர்கள் பொதுவாக துளசி காட் அருகே நீராடுகிறார்கள், இது மேலே குறிப்பிட்டபடி, அசி கங்கா சங்கத்தில் ஆன்மீக அனுமதியின் கீழ் வருகிறது. அவர்கள் அசி காட் அருகே குளிக்கலாம்.

அசி காட்டில் கங்கா ஆரத்தி நடத்தப்படுகிறது, இது ஒரு கண் கொள்ளா காட்சி ஆகும்.

### வருணா சங்கம்

காசி காண்டம், அத்தியாயம் 30 படி, காசி ஒரு முகதி க்ஷேத்திரம். நீண்ட காலத்திற்கு முன்பு யமன், இந்திரன் மற்றும் அக்னி ஆகியோர் காசியில் பக்தர்கள் ஆன்மீக செயல்களில் ஈடுபட்டதைக் கண்டு அவர்கள் காசிக்கு எல்லைகளை வரைந்தனர்.

மேற்கண்ட இறைவன்கள் அனைவரும், புனித நகரத்தில் அசத்திய (பொய்) மற்றும் கெட்ட எண்ணங்களை அழிக்கும் நோக்கில், அசி நதியை உருவாக்கினர். பிறகு வருணா நதியை உருவாக்கி காசியின் மறுமுனையில் ஓடச் செய்தார்கள்.

சிவபெருமானின் வழிகாட்டுதலின்படி, விஷ்ணு காசியை நோக்கிச் சென்றார் (தயவுசெய்து பாதோதக தீர்த்தத்தைக் குறிக்கவும்). காசியை அடைந்ததும், விஷ்ணு க்ஷேத்திரம் முழுவதையும் பறவைக் கண்களால் பார்த்தார். பின்னர் அவர் வருணா மற்றும் கங்கை நதிகள் சங்கமிக்கும்



காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.






வருணா நதி

இடத்திற்குச் சென்று கை, கால்களைக் கழுவினார்.

விஷ்ணுவின் சரண மரியாதையுடன் குறிப்பிடப்படும் பாதங்கள்) கழுவப்பட்ட இடம் பாதோதக தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. காசி காண்டம், அத்தியாயம் 58 இன் படி, பாதோதக தீர்த்தத்தில் நீராடும் பக்தர்கள், தற்போதைய வாழ்க்கை உட்பட, 7 பிறவிகளில் திரட்டப்பட்ட அனைத்து பாவங்களையும் தூய்மைப்படுத்துவார்கள்.

காசி கண்டத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் கருத யுகத்தில் நிகழ்ந்திருக்க வேண்டிய நேரத்தில், வருணன் இன்றைய திரிலோச்சன வரை நீட்டிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் வருண கங்கை சங்கமத்திற்கு அருகில் விஷ்ணு தனது பாதங்களைக் கழுவிய இடம் பாதோதக தீர்த்தம் ஆகும்.

தற்சமயம், இந்த புனித தீர்த்தம் திரிலோசனேஸ்வரர் கோவிலில் கிணற்றின் வடிவத்தில் உள்ளது. இந்த புனித தீரத்தம் கங்கையுடன் கலந்திருக்க கூடும்.






e-magazine
aanmeegamalar.com




## வருணா நதி
## கங்கா நதி சங்கமம்

காசி காண்டம் பல இடங்களில் வருணா நதியின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டுள்ளது. வருண கங்கா சங்கமத்தில் நீராடி, வருணசங்க மேஸ்வரரை வழிபடும் பக்தர்களுக்கு எல்லாவித மான செழிப்பும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

காசி யாத்திரை மேற்கொள்ளும் தென்னிந் திய யாத்ரீகர்கள் பஞ்ச கட்ட பிண்டம் மேற்கொள் கிறார்கள். அதற்காக அடையாளம் காணப்பட்ட இடங்களில் ஒன்று வருணா. இருப்பினும், அவர்கள் சடங்கு செய்யும் ஐந்தாவது இடம் திரிலோச்சன் காட் ஆகும்.

இதற்குக் காரணம், வருணனின் ஆன்மீக செல்வாக்கு தரிலோசன் வரை பரவியிருக்க வேண்டும்.






e-magazine aanmeegamalar.com

இருப்பினும், பக்தர்கள் வருண கங்கை சங்கம் வரை படகு சவாரி செய்ய அறிவுறுத்தப் படுகிறார்கள், மேலும் அவர்கள் மற்ற தெய்வங்க ளுடன் ஆதி கேசவர் கோவிலையும் தரிசனம் செய்யலாம்.

## பில்பிலா தீர்த்தம்

காசி காண்டம், பல்வேறு இடங்களில், பில் பிலா தீர்த்தம் என்று அழைக்கப்படும் ஒரு முக்கியமான தீர்த்தத்தைக் குறிப்பிடுகிறது.

காசி காண்ட நாட்களில், இந்தத் தீர்த்தம் மிகப் பெரியதாக இருந்திருக்க வேண்டும், ஆனால் இப்போது அது கூப் (கிணறு) வடிவத்தில் உள் ளது. திரிலோசனேஸ்வரர் கோவிலுக்கு அருகில் பில்பிலா கிணறு அமைந்துள்ளது. அக்ஷய தரிதீயா நாளில் (பலர் கிணறில் குளிக் கும் மிகவும் புனிதமான நாள்) ஆசிரியர் அந்த இடத்திற்குச் சென்றார். கிணற்றில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீரைக் கொண்டு ஆசிரியர் குளித்து, மேற்கண்ட நன்னாளில் மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதைப் புரிந்து கொண்டார்.

அக்ஷய தரிதீயா நாளில் பில்பிலா தீர்த்தத் தில் குளிப்பதும், திரிலோசனேஸ்வரர் மற்றும் மதுசூதனன் (வாமன கேசவ்) ஆகியோரின் தரிசனம் செய்வதும் மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது, மேலும் ஆசிரியர் மேலே குறிப்பிட்டபடி புனிதமான சடங்குகளை மேற்கொள்ளும் அளவுக்கு பாக்கியத்தை கொடுத்ததற்கு, இறைவனுக்கு நன்றி தெரி வித்து கொள்கிறார்.

## விமல தீர்த்தம்

விமல தீர்த்தம் ஒரு முக்கியமான தீர்த்தம். இப்போது தீர்த்தம் பிசாச மோசன தலாப் என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது வாரணாசியில் உள்ள மிகப்பெரிய தீர்த்தமாகும். பக்தர்கள் இப்போதும் புனித நாட்களில் இந்த குளத்தில் நீராடுகிறார்கள்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

# பிரச்னை தீர்க்கும் அபிஷேகம்

ஆத்தூர்கள்ளக்குறிச்சி வழியில் அம்மையகரம் பஸ் ஸ்டாப்பிலிருந்து 1 கி.மீ. தொலைவில் உள்ளது சொர்ணபுரீஸ்வரர் திருக்கோயில். பஞ்சபூத தலங்களுக்கு இணை யானதாகக் கருதப்படும் இந்தக் கோயில் கருவறை மிகவும் உக்கிரமானதாக இருக்கும். கருவறையின் மையத்தில் ஒரு தீபம் துடிப்புடன் எரிந்துகொண்டே இருக்கிறது. தேன், பால், தயிர், இளநீர், விபூதி, சந்தனம், கரும்புச்சாறு, நெய், அரிசி மாவு, நல்லெண்ணெய், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம், புனிதநீர் போன்ற 13 வகைப் பொருட்களை சிவலிங்கத்தின் உச்சியில் அபிஷேகம் செய்கிறார்கள். அவை, 16 பட்டைலிங்கத்தின் அடிப்பகுதி வரை வந்து பீடத்தில் ஐக்கியமாகின்றன. ராகு காலத்தில் அபிஷேகம் செய்வதால் அனைத்துப் பிரச்னைகளும் தீரும் என்பது ஐதீகம்.

# வித்தியாசமான அர்த்தநாரீஸ்வரர்

தஞ்சாவூரில் உள்ள கரந்தட்டாங்குடி பெரிய நாயகி சமேத வசிஷ்டேஸ்வரர் ஆலயம், வசிஷ்ட முனிவரால் வழிபடப்பட்ட தலம். இத்தல ஈசனின் கருவறை, கோஷ்டத்தில் உள்ள அர்த்தநாரீஸ்வரரின் சிற்பம், வழக்கத்திற்கு மாறாக ஈசனின் வலப்புறம் அம்பிகை இடம் பெற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது, வித்தி யாசமானதாக இருக்கிறது.










e-magazine
aanmeegamalar.com

# பாதயாத்திரிகளை வரவேற்கும் பழநி முருகன் அன்னதான குடில்

தைப்பூசத்திற்கு விரதம் இருந்து பழனிக் வேல்கு பாதயாத்திரையாக செல்லும் பக்தர்களுக்காக திண்டுக்கல்லிலும் ஒட்டன்சத்திரம் அருகே விருப்பாச்சி மேடு முன்பாகவும், “பழநி முருகன் அன்னதான குடில்” அமைக்கப்படுகிறது.

இந்தக் குடில் உலகம் முழுவதுமுள்ள முருக பக்தர்களால் ஒன்றிணைந்து நடத்தப்படுகிறது.

வரும் ஜனவரி 21ம் தேதி திண்டுக்கல் பழநி ரோட்டில் வேர்ஹவுஸ் பில்டிங்கிற்கு எதிராக உள்ள பாரத் பெட்ரோலியம் பங்கில் “பழநி முருகன் அன்னதான குடில்” அமைக்கப்படுகிறது.

இங்கு 21ம் தேதி மாலை 5 மணிக்குப் பில்டர் காபி உடன் அன்னதானம் துவங்குகிறது.

பின் 6 மணிக்கு குத்துவிளக்கேற்றி வேல் பூஜை நடக்கிறது.

குத்துவிளக்கு ஏற்றும் வாய்ப்பு அதிக ஆண்டு களாகப் பாதயாத்திரை வரும் பக்தர்களை தேர்ந்தெடுத்து அளிக்கப்படுகிறது. அவர்கள் கவுரவிக்கப்படுவார்கள்.

தொடர்ந்து 6:30 மணிக்கு இரவு சிற்றுண்டியில் கேசரி, இட்லி, ஊத்தாப்பம் வழங்கப்படுகிறது.

இரவு 8:00மணிக்கு துணி பையில் வைத்துப் பழங்கள் பிஸ்கட் பாக்கெட்டுகள் வழங்கப்பட உள்ளன.

குடிலுக்கு வரும் பக்தர்களுக்கு, ஒட்டன்சத்திரம் அருகே விருப்பாச்சி மேட்டில் அமைக்கப்படும் பழநி முருகன் அன்னதானகுடிலுக்கு வரும்படி அழைப்பு வழங்கப்படும்.










விருப்பாச்சி மேட்டில் ஜனவரி 22ம் தேதி மாலை முதல் 23ம் தேதி மாலை வரை அன்ன தான விழா நடக்கிறது.

ஜனவரி 22ம் தேதி மாலை 5மணிக்கு குடிலுக்கு வரும் பாதயாத்திரை பக்தர்கள் பில்டர் காபியுடன் வரவேற்கப்படுகின்றனர்.

பின் குத்துவிளக்கேற்றி வழிபாடு பஜனை நடைபெறும். தொடர்ந்து இரவு சிற்றுண்டி.

ஜனவரி 23ம் தேதி அதிகாலை 5மணிக்கு பில்டர் காபி காலை 7மணிக்கு சிற்றுண்டி வழங் கப்படுகிறது.

23ம் தேதி மதியம் தலைவாழை இலையில் விரத சாப்பாடு அளிக்கப்படுகிறது. குடிலில் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்படுகிறது. பக்தர்களுக்கு மருத்துவ உதவியும் மருந்துகளும் அளிக்கப்படுவதுடன் மசாஜ் போன்ற வசதிகளும் செய்யப்படுகின்றன.

இடை இடையே குடிலுக்கு வரும் பக்தர் களுக்கு துணி பையில் வைத்து பழங்கள் பிஸ்கட் 5ஆயிரம் பேருக்கு வழங்கப்பட உள்ளன.

முருக பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க நினைப்பவர்களை ஒன்றிணைக்கும் நமது குடில் “பழநி முருகன் அன்னதான குடில் அறக்கட்டளை” என முறைப்படி பதிவு செய் யப்பட்டுள்ளது.

இங்கு நேரிடையாகச் சேவையாற்ற விரும்புபவர் கள் குடிலுக்கு வரவேற்கப்படுகிறார்கள்.

இந்த அறப்பணியில் பங்கேற்க விருமபும் வெளியூர மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் பக்தர்கள் பொருளுதவி நிதியுதவி அளித்து ஒன்றிணையலாம். நமது குடிலுக்கு வந்து சென்ற பாதயாத்திரை பக்தர்களும் தங்கள் பங்களிப்பை அளித்து வரு வது கூடுதல் சிறப்பு.

மேலும் விபரம் அறிய 9944309719 9842198889 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.




தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு
தயாராகிறது
ஆறுபடையப்பன்
சிறப்பிதழ்
விளம்பரம் மற்றும் பிரதிக்கு தொடர்பு கொள்ளவும்
9994162182 / 9994323622
9444228203



# நிறம் மாறும் மீனாட்சி

சிவகங்கை மாவட்டம் திருபுவனம் அருகேயுள்ளது கல்லு மடை. இங்கேயுள்ள திருநாகேசுவரமுடையார் கோயிலில் உள்ள மீனாட்சி அம்மன் விக்கிரகம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறைநிறம் மாறுகிறது. பச்சை, மஞ்சள், ஊதா ஆகிய நிறங்களில் நிறம் மாறும் இந்த அம்மன் எழுந்தருளியிருக்கும் ஆலயம் 1300 ஆண்டுகள் பழமை வயந்ததாகும்.

# பாவங்கள் போக்கும் பாதாள நந்தி

கும்பகோணம்மயிலாடுதுறை வழியில் உள்ளது திருவாலங்காடு. இறைவன், ஆலங்காட்டீசர். இறைவி, உண்டார் குழலம்மை. மூன்றாம் குலோத்துங்கன் இக்கோயிலைக் கட்டியதாக வரலாறு. இங்குள்ள நந்தியம்பெருமான் பூமியில் அழுந்தி பாதாள நந்தியாகக் காட்சியளிக்கிறார். பிரதோஷ காலத்தில் இவருக்கு அறுகம்புல் சாத்தி வழிபட்டதால் முன் வினைப் பாவங்கள் பாதாளத்தில் அமிழ்ந்து விடும் என்பது ஐதீகம்.

# கூழாங்கல் பிரார்த்தனை

சேலத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தேமலை அடிவாரத்தில் ஒரு புளிய மரத்தடியில் அருள்பாலிக்கிறார் முனியப்பன் சாமி. இக்கோயிலில் இவருக்கு அருகில் கூழாங்கற்கள் நிரம்பிய தட்டு உள்ளது. இங்கு வரும் பக்தர்கள் முனியப்பனை வணங்கி கண்ணைக் கட்டிக்கொண்டு, தட்டில் இருக்கும் கூழாங்கற்களை குத்து மதிப்பாக அள்ளுகின்றனர். பிறகு கண்களை திறந்து கையில் இருக்கும் கற்களை எண்ணிப் பார்க்கிறார்கள். கற்களின் எண்ணிக்கை ஒற்றைப்படையாக வந்தால், நினைத்த காரியும் கைகூடும் என்பது நம்பிக்கை.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



நமது இதழுக்கு விருப்ப சந்தா செலுத்த விருப்பமுள்ளவர்கள்

UPI மற்றும் வங்கி வாயிலாகவும் செலுத்துங்கள்...

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 49510100003648
IFSC CODE: BARB0KODAMB
(FIFTH CHARACTER IS ZORO)
BANK OF BARODA
(KODAMBAKKAM BRANCH)

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
சார்பில் வெளியிடும்

23.01.2024
அன்று வெளிவரும்...

# தைப்பூசம் திருவிழா
# ஆறுபடையப்பன் சிறப்பிதழ்



**48 பக்கம்**

- ஆறுபடைமுருகன் ஸ்தலங்கள் சிறப்பு
- 12 ராசிக்குரிய முருகன் கோவில்கள்
- மூன்றாம் படைவீடு ரகசியம்
- முழங்கால் வலி தீர்க்கும் முருகன்
- செம்பு முருகனின் சிறப்புகள்



இந்த ஆண்டின் கிரிவல நாட்கள்,
பிரதோஷ நாட்கள், போன்றவற்றின்
தொகுப்பு கொண்ட பொக்கிஷம்
புத்தகம் தேவைப்படுவர்கள்,
விளம்பர முகவர்கள்
தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

**Ph:9994323622 / 9994162182**

9444228203

# ஆசை என்ற மகாநதி...



பூமியில் வாழுகின்ற மனிதர்களின் வாழ்க்கையை மிக நுணுக்கமாக ஆராய்ந்தால் அவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் பெறுகின்ற துக்கங்களை மட்டுமே பெரிய அளவில் காண முடிகிறது.

மனிதர்கள் தங்களது துன்பங்களைதுயரங்களை நீக்கி ஆனந்த மயமாக வாழவேண்டும் என்பதே புத்தரின் மிக முக்கிய கோட்பாடுகளாகும். உலகம் துன்பமையமானது என்றால் துக்கம் என்றால் என்ன? அதற்க்கான மூலகாரணம் என்ன? அவைகளை நீக்குவதற்கான வழிமுறைகள் என்ன? என்பதை ஆராய்வதே பௌத்த மதத்தில் ஆரிய சக்தியம் அதாவது மேலான உண்மைகள் என்ற பெயரில் அழைக்கபடுகிறது.

துக்கம் அது உற்பத்தியாகும் நிலை அதை நிவாரணம் செய்தல் நிவாரணத்திற்கான வழிவகைகள் என்பவைகள் புத்த மதத்தில் மிக நேர்த்தியாகவும் விரிவாகவும் கூறப்படும் உண்மைகளாகும் இதில் நிவாரணத்திற்கான மார்க்கத்தை கண்டறிந்து நிவாரணம் அடைவதே நிர்வாணம் என்று அழைக்கபடுகிறது. இங்கு நிர்வாணம் என்ற வார்த்தை ஆடைகள் இல்லாத உடம்பை குறிப்பது அல்ல. ஆசைகள் இல்லாத இன்பமையமான ஆத்மாவின் உயர் நிலையை

e-magazine
aanmeegamalar.com

குறிப்பதே ஆகும்.

நிர்வாணம் என்பதை மனிதர்கள் பேசுகின்ற வார்த்தைகளால் விவரித்து விட முடியாது. காரணம் நமக்கு தெரிந்த நமக்கு மிகவும் பழக்கப்பட்ட கருத்துக்களையும் பொருள்களையும் குறிக்கும் அடையாளங்களே வார்த்தைகளாகும்.

வார்த்தைகளுக்கு எல்லாவற்றையும் புரிய வைக்கும் ஆற்றல் இருப்பதாக கூறிவிட இயலாது. சத்தியத்தை எந்த மொழியும் இது தான் என்று அறுதியிட்டு கூரிவிடாது. சரியான பொருளுக்கு தவறான விளக்கம் கொடுத்து நம்மை வார்த்தைகள் தடுமாற வைத்து விடும். ஆகையால் வார்த்தைகளால் விவரிக்கப்படும் நிர்வாண அனுபவங்கள் இன்னதென்று நம்மால் விளங்கி கொள்ள இயலாது என்று வல்பொல ராகுல என்ற சிங்கள புத்த மத அறிஞர் சொல்கிறார்.

ஆனாலும் நிர்வாணத்தை சிவம், ஷேமம் முதலிய சொற்களாலும் சரணம், அக்கறை, சாந்தி முதலிய சொற்களாலும் பௌத்த நூல்கள் அழைக்கின்றன. அவைகள் மனிதன் இறந்த பிறகு அடைவதாக நம்பப்படும் சொர்க்கம் அல்ல நிர்வாணம் அது உயிரோடு மனிதன் இருக்கும் போதே பெறக்கூடிய ஒரு உன்னத அனுபவம் என்று சொல்கின்றன.

நான் எனது என்ற அகங்காரத்தை அழித்து ஒழுக்கம் மற்றும் தியானத்தின் மூலம் பெறுகின்ற சமாதி நிலை என்ற சாந்த நிலையே நிர்வாணம் என்று சொல்லலாம் இந்த உயரிய நிர்வாண நிலையை புத்த பெருமான் தமது முப்பத்தி ஐந்தாவது வயதிலையே அடைந்து விட்டார். புத்தரின் முக்தி நிலையை புத்த மதம் பரி நிர்வாணம் என்ற பெயரில் அழைக்கிறது.

ஆசையினாலும் அறியாமையாலும் பெறுகின்ற துன்பங்களை முற்றிலுமாக நீக்கி பேரின்ப பெருநிலையை வாழும் காலத்திலையே ஒரு மனிதன் பெற்றுவிட வேண்டும். காமம், வெகுளி என்ற கோபம், ஒன்றை மற்றொன்றாக புரிந்து கொள்ளும் அறிவின் மயக்கம் ஆகிய இந்த மூன்றுமே மனித வாழ்வை பீடித்து ஆட்டுவிக்கும் கொடிய நோய்களாகும். அத்தகைய கொடிய நோயான துயரத்திற்கு புத்தமதம் பல விளக்கங்களை தருகிறது.

பொதுவாக துக்கம், துயரம் என்ற வார்த்தைகள் மனிதன் அனுபவிக்கின்ற கஷ்டங்களை குறிப்பதாக இருக்கிறது. இவைகளுக்கு இது தான் பொருள் என்றாலும் துக்கம் என்பது ஒன்று அல்ல அது பல மனிதனாக பூமியில் பிறப்பெடுத்ததே முதல் துக்கம் அந்த பிறவியில் நமது உடல் அனுபவிக்கும் நோய்நொடிகள் முதுமை என்பது இரண்டாவது வகை துக்கம் இவைகளை எல்லாம் அனுபவித்தாலும் கடேசியில் பாடுபட்டு சேர்த்த பொருள்களையும் அறிவையும் பிறந்த நாள் முதல் கூடவே வருகின்ற உடலையும் விட்டு விட்டு இருக்கிறதா? இல்லையா? என்று தெரியாத ஒரு மகா சூன்யத்திற்குள் போகின்ற மரணம் என்பது மிகபெரிய துக்கம் அது மூன்றாவது துக்கம்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

இந்த மூன்று துக்கங்களை எந்த மனிதனும் தவிர்த்து விட முடியாது. அனுபவித்தே ஆக வேண்டிய கட்டாய துக்கங்களாகும். இது தவிர தாய், பிள்ளையாய் பிரிவது, கணவன்



e-magazine
aanmeegamalar.com



மனைவியை பிரிவது, நண்பன் நண்பனை பிரிவது என்று எத்தனையோ பிரிவு துயரங்களும் உண்டு இது மட்டும் அல்லாமல் எதிரிகளால் அனுபவிக்கும் பகைமை துயரம் விரும்பியது கிடைக்காத கையறு நிலை துயரம் என்று துயரங்களின் பட்டியல்கள் நீண்டுகொண்டே போகிறது.

கண்ணுக்கு அழகாகவும் கவர்ச்சியாகவும் தெரிகின்ற இந்த உலகத்தை சற்று ஆழ்ந்து நோக்குவோம் என்றால் உலகம் முழுவதுமே துன்பமையமாக இருக்கிறது. மரம் படுவது, மலர் வாடுவது, நீர் நிலைகள் காய்வது எல்லாமே துயரங்கள் அல்லாது வேறு என்ன?




அண்டத்தில் இருந்து நாதம் பிறக்கிறது, விதையிலிருந்து மரம் பிறக்கிறது, கொடியில் இருந்து மலர் பிறக்கிறது கண்ணுக்கே தெரியாமல் கண்களை குருடாக்கும் இந்த துக்கம் என்பது எதிலிருந்து பிறக்கிறது? நாம் சொல்வோம் என் தந்தையார் சொத்து சுகம் சேகரிக்கவில்லை ஆரோக்கியமான உடம்பை என் பெறோர்கள் எனக்கு தரவில்லை நான் பட்டம் பதவிகளை பெற உற்றார் உறவினர் நண்பர்கள் யாருமே உதவ வில்லை எனவே எனது துயரங்களுக்கு காரணம் மற்றவர்களே தவிர நான் அல்ல என்போம்.

ஆனால் புத்தர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை நமது துயரங்களுக்கு காரணம் நமது ஆசைகளே என்று அடித்து சொல்கிறார். கண்களை மூடி நிதானமாக யோசித்து பாருங்கள் புத்தர் சொல்வதில் உள்ள உண்மை தெரியும்.

கார வகைகள் நன்றாக இருக்கிறது. மாமிச போஜனம் சுவையாக இருக்கிறது. புகையிலை, மது, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்கள் தெகட்டாத சந்தோசத்தை தருகிறது என்று நம் நாக்கு நம்மை அடிமையாக்குகிறது. நாக்கு என்ற சுவை உணர்ச்சிக்கு அடிமையாகும் போது கடைசி முடிவு துயரமாக வருகிறது. நாக்கு சுவைக்கு அடிமையாவது போல அழகான பொருள்களை ரசிக்கவும், அனுபவிக்கவும் துடிக்கிறோம். அவைகள் கிடைக்கும் போது ஆனந்தத்தில் மிதக்கிறோம். கிடைக்கவில்லை என்றால் துயரம் என்ற பெறும் சேற்றில் விழுந்து துடி துடித்து அழுகிறோம் ஆண் பெண்ணை மோகிப்பதும் பெண் ஆணை வசிகரிப்பதும் கடைசியில் இன்பத்தை தருவதில்லை.

e-magazine
aanmeegamalar.com

குப்புற தள்ளி போட்டு விட்ட ஆசையை ஒழிக்காமல் துயரத்திலிருந்து மீண்டுவர முடியாது. ஆசையை ஒழிக்க வேண்டும் எல்லாவிதமான ஆசையையும் ஒழிக்க வேண்டும் அப்பொழுது தான் பிறப்பிறப்பு என்ற சங்கிலி தளையிலிருந்து விடுபட்டு பிறவாத நிலையாகிய வீடுபேற்றை அடைய முடியும். பற்றுகளை விட்டு விட்டு என்னை மட்டுமே பற்றிகொள் என்று கண்ணபரமாத்மா சொன்னதையே ஆசையை விடு விடுதலை பெரு என்று புத்தர் சொல்கிறார்.

ஆசைப் படபட ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தமாமே

– என்று திருமூலரும்

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

– என்று வள்ளுவரும் சொல்கிறார்கள்.

இதையே தான் பௌத்தமும் சொல்கிறது விளக்கில் நெய்யை உற்ற உற்ற அது சுடர்விட்டு பிரகாசிக்கும் அடுப்பில் விறகை போட போட அது கொழுந்து விட்டு எரியும் நெய் தீர்ந்தால் விளக்கும் குளிர்ந்து விடும் விறகு இல்லை என்றால் அடுப்பும் அணைந்து விடும்.

அதை போலவே ஆசைகள் என்பது பெருக



பெருக துயரங்கள் என்பது வளர்ந்து கொண்டே போகிறது. ஆசைகள் குறைய வேண்டும் ஆசைகள் ஒழிய வேண்டும் அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? புத்தர் அதற்கும் வழிகாட்டுகிறார். அதை அடுத்த பதிவில் சிந்திப்போம்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# குடும்ப ஒற்றுமை வளர்க்கும் துளசீஸ்வரர்



அகத்தியர் பிரதிஷ்டை செய்த 108 லிங்கங்களுள் ஒன்று துளசீஸ்வரர். இவர் சிங்கப் பெருமாள் கோயில் – வல்லக் கோட்டை பாதையில் உள்ள கௌத்தூரில் கோயில் கொண்டிருக்கிறார். பொதுவாக, வில்வ தளங்களால் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்யப்படும். இத்தலத்தில், துளசி தளங்களால் அர்ச்சனை செய்யப்படுகிறது. ஒற்றுமையில்லாத கணவன் – மனைவி மற்றும் ஜாதகத்தில் சந்திரபலம் குறைந்தவர்கள், இந்த ஈசனை துளசி தளங்களால் அர்ச்சித்து வணங்க, அந்த குறைபாடுகள் நீங்குவதாக ஐதீகம்.

ஆன்மிகமலர்
மெயில் புக்




இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க










aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்











# ஆன்மீக வழியில் அமைதி

பாவ புண்ணிய கர்மாக்களின் பலன்களைப் பொறுத்து ஒவ்வொரு ஜீவனுக்கும் அதற்குத் தகுந்த சரீரம், பெற்றோர்கள், மகன்கள், மகள்கள் மற்றும் உறவுகள் போன்றவைகள் கிடைக்கும். அதாவது ஒரு மனிதனிடம் புண்ணிய கர்மப் பலன்கள் அதிகம் இருந்தால் அவனுக்கு நல்ல குணமுடைய பெற்றோர்கள், மகன்கள், மகள்கள் உறவுகள் போன்ற சுகமான வாழ்வு கிடைக்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதேபோன்று மனிதனிடம் பாவ கர்மா பலன்கள் அதிகம் இருந்தால் சரீரக்குறைபாடு, குடிகாரத் தந்தை, பாசமில்லாத தாய், குணங்களற்ற மகன்கள், மகள்கள், உறவுகள் மற்றும் சூழ்நிலைகள் போன்றவை அமையும்.

பொதுவாக மனித ஜன்மம் எடுத்த ஜீவன்கள் உலக செயல்பாடுகளில் ஈடுபட்டு மீண்டும் பாவம் புண்ணியம் போன்ற கர்மாக்களை சேர்த்துக் கொள்கின்றன. ஒரு ஜீவன் தன்னுடைய செயல்பாடுகள் மூலம் அளவற்ற புண்ணிய பாவ கர்மாக்களை சேர்த்திருந்தால் அது சஞ்சித கர்மா என்று அழைக்கப்படுகிறது. சஞ்சித கர்மா என்பது ஒவ்வொரு ஜீவனிடத்தில் உள்ள புண்ணிய பாவ கர்மாக்கள் என்று பொருள். அதாவது அந்த ஜீவன்கள் ஏற்கனவே செய்த பாவ புண்ணியக் குவியல்கள் சஞ்சித கர்மா ஆகும். அதாவது அந்த ஜீவன்களிடம் முன் ஜென்மத்தில் ஏற்கனவே இருக்கும் புண்ணிய பாவ கர்மாக்கள்தான் சஞ்சித கர்மா என்று கூறப்படுகிறது.

சஞ்சித கர்மாவில் உள்ள பாவ புண்ணிய கர்மாக்களில் ஒரு குறிப்பிட்ட அளவு ஜீவனின் பாவ புண்ணிய கர்மாக்களை வெளிபடுத்துவதன் காரணமாக அந்த ஜீவனுக்கு மனித ஜென்மம் ஏற்படுகிறது. அப்படி ஒரு குறிப்பிட்ட அளவு புண்ணிய பாவ கர்மாக்களை வெளிபடுத்தும் கர்மாவிற்கு பிராரத்த கர்மா என்று கூறப்படுகிறது. பிராரத்தம் என்றால் வெளிப்பட்ட பாவங்கள் புண்ணிய கர்மாக்கள் என்று பொருள்படும். பிரபஞ்சத்தில் நாம் ஆணாகவோ, பெண்ணாகவோ பிறந்தது நமது விருப்பப்பட்டு தேர்ந்தெடுத்தது அல்ல. அதேபோல் நாம் பிறந்த இடம், நமது பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள் போன்றவற்றை நாம் விருப்பப்பட்டு



e-magazine
aanmeegamalar.com



தேர்ந்தெடுத்தது அல்ல. நாம் செய்த புண்ணிய பாவ கர்மாக்களுக்கு ஏற்றவாறு நமது வாழ்வு அமைவதுதான் பிரார்த்தம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனித ஜன்மங்கள் மூலம் நாம் பாவ புண்ணியங்களை ஒரு வழியில் சுகம், துக்கம் போன்றவற்றால் தீர்த்துக்கொண்டு இருக்கிறோம். அதேபோன்று மற்றோரு வழியில் அதாவது நம் மனம், வாக்கு, செயல்பாடுகள் போன்றவற்றின் மூலம் நாம் பாவ புண்ணியங்களை அறிந்தும் அறியாமல் நம்முடன் சேர்த்துக் கொண்டு இருக்கிறோம். மனிதர்கள் பிரார்த்த கர்மாக்கள் மூலம் அதாவது உலக செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். மனிதன் செய்யும் பாவ புண்ணிய கர்மாக்கள் மூலம் பிரார்த்த கர்ம பலன்களை அவன் உடலளவில், மன அளவில் அனுபவவிப்பவனாகவும் இருக்கின்றான்.

கர்மாக்கள் சஞ்சித கர்மா, பிரார்த்த கர்மா மற்றும் ஆகாமி கர்மா என மூன்று கர்மாக்கள் இருப்பதாக சாஸ்திரம் கூறுகிறது. ஆகாமி கர்மா என்பது இந்தப்பிறவியில் நமது செயல்பாடுகளின் மூலம் புதிதாக சேர்த்துக்கொள்கிற பாவ புண்ணிய கர்மாக்கள் என்று சாஸ்திரம் கூறுகிறது. மனிதனுக்கு அல்லது ஜீவனுக்கு பிரார்த்த கர்மா முடியும்போது மரணம் என்று ஒன்று ஏற்படுகிறது. மனிதன் இறந்தவுடன் இந்த ஜென்மத்தில் அவன் செய்த பாவ புண்ணிய கர்மாக்கள் சஞ்சித கர்மாவில் சேர்ந்து விடுகிறது அல்லது கலந்து விடுகிறது.

பொதுவாக ஒரு ஜீவன் இறந்தவுடன் அவனது பிரார்த்த கர்மா முடிந்து விடுகிறது. அதேபோல் ஆகாமி கர்மாவும் ஜீவன் இறந்தவுடன் முடிந்து விடுகிறது. பிரார்த்த கர்மாவும், ஆகாமி கர்மாவும் முடிந்த பிறகு மீதம் உள்ள சஞ்சித கர்ம மட்டும் அந்த ஜீவனுக்குள் இருக்கிறது. ஜீவனிடம் வெளிப்பட்ட கர்மாவுக்கு பிரார்த்த கர்மா என்று பெயர். அவ்வாறு வெளிப்பட்ட கர்மாவில் அந்த ஜீவனிடம் பாவங்கள் அதிகமாக இருந்தால், மிருக ஜென்மமாக வெளிப்படுகிறது.

மனிதனாக பிறந்த அந்த ஜென்மத்தில் உலக செயல்பாடுகளில் அவன் புதிதாகச் செய்யும் பாவ



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

e-magazine
aanmeegamalar.com

புண்ணிய கர்மாக்களுக்கு ஆகாமி கர்மா என்று கூறப்படுகிறது. எனவே மனிதன் மன அமைதி பெறவும் மனித ஜென்மத்திற்கு கீழான பிறவிகள் பிறக்காமல் இருக்க வேண்டுமானால் புண்ணிய கர்ம பலன்களை மட்டும் நாம் சேர்க்க வேண்டும். இந்த கர்ம தத்துவத்தை விளக்கும் விதமாக தமிழ் மூதாட்டி ஔவையார் 'அரிது அரிது மானிடர் ஆதல் அரிது. மானிடர் ஆயினும் கூன்குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது' என்று மனித பிறவியின் உயர்வினைப் பற்றி கூறுகிறார்.

பொதுவாக மனிதன் மனதளவில் உடலளவில் அடையும் துன்பங்களை அவன் அனுபவவிக்கும்போது இது நமது தலையெழுத்து என்று விரக்தியாக மனம் சோர்ந்து விடக்கூடாது. தனக்கு வரும் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான முயற்சிகளை மனிதன் மேற்கொள்ளவேண்டும். அதாவது நமது கர்மாவிலிருந்து விடுபடுவதற்கு நாம் முழுமையாக முயற்சி மேற்கொள்ளவேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. அவ்வாறு நாம் முழுமையாக முயற்சிகள் மேற்கொண்டும் கஷ்டத்திலிருந்து விடுபடவில்லையானால்தான் இது நமது பிரார்த்த கர்மா என்று நினைத்து நமது மனதை ஆறுதல்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது இது நமது பிரார்த்த கர்மா என்று மனதில் நினைத்து, அதனை முழு மனதாக ஏற்றுக்கொண்டு மன அமைதியுடன் வாழ்வதற்கு நம் மனதை பக்குவ நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஒவ்வொரு ஜீவனிடத்திலும் பாவ புண்ணிய கர்மா பலன்கள் குவியலாக இருக்கிறது. அதனை சஞ்சித கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த சஞ் சித கர்மாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டும் வெளிப்படுகிறது. அவ்வாறு வெளிப்பட்ட புண்ணிய பாவ கர்மாவுக்கு பிரார்த்த கர்மா என்று பெயர். மனித ஜென்மம் எடுத்து அவன் உலக செயல்பாடுகள் மூலம் புதிதாக பாவ புண்ணிய கர்ம பலன்களை சேர்க்கிறான். அவ்வாறு மனிதன் சேர்க்கும் புதிய பாவ புண்ணிய கர்மாவுக்கு ஆகாமி கர்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த ஆகாமி கர்மா (புதியதாக சேர்ந்துள்ள பாவ புண்ணியங்கள்) அந்த ஜீவனின் மரணத்திருக்கு பிறகு சஞ்சித கர்மாவுடன் கலந்து விடுகிறது. இவைகள்தான் கர்மா நியதி அல்லது கர்மா தத்துவம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

இந்தக் கர்மா பலன்களைப் பற்றி அறிந்து கொள்வதால் நமக்கு என்ன நன்மை ஏற்படப்போகிறது என்று சிந்தித்துப் பார்த்தால், பொதுவாக நாம் மனிதர்களிடம் பலவிதமான வேற்றுமைகளைப் பார்க்கிறோம். இந்த உலகில் பணக்காரன், ஏழை, பூர்ண சரீரம் பெற்றவன், ஊனமுற்றவன், நோயாளிகள், ஆரோக்கியமானவர்கள் என்று பலவிதமாக பார்க்கிறோம். மனிதப் பிறவியில் பலவிதமான வேற்றுமைகளை இன்றும் உலகில் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இந்த வேற்றுமைகளை நாம் ஏற்றுக்கொண்டு நமது பாவ புண்ணியங்களின் கர்மாவின் பலன் என்று நினைத்து இன்ப துன்பங்களை அனுபவவிக்க வேண்டும்.

இந்த உலகில் குழந்தையாகப் பிறக்கும்போது, ஒரு குழந்தை சிவப்பாகவும், மற்றொரு குழந்தை கருப்பாகவும், சில குழந்தைகள் பிறக்கும்போது நோயுடனும்,சில குழந்தைகள் ஆரோக்கியமாகவும், சில குழந்தைகள் அங்கஹீனமாக பிறக்கின்றன. அதற்குக் காரணம் முன்ஜென்மத்தில் செய்த பாவ புண்ணிய கர்மாவின் அடிப்படையில் அத்தகைய குழந்தைகள் பிறக்கின்றன என்று சாஸ்திரம் கூறுகிறது. அவை ஈஸ்வரனின் விருப்பத்தின் அடிப்படையில் பிறக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டாவது காரணம் புண்ணிய பாவ கர்மாக்களின் பலன் நாம் அனுபவவிக்கும் ஒவ்வொரு துன்பத்திற்கும் இன்பத்திற்கும் நாம்தான் பொறுப்பு. பாவ புண்ணிய கர்மாக்கள் மனிதனுக்குப் பொறுப்பு என்னும் செயலைக் கொடுக்கிறது. கர்ம தத்துவத்தின்படி ஒவ்வொருவருடைய சுக துக்கங்களுக்கும் அவன்தான் பொறுப்பு ஆகும். நமக்கு உடலளவில், மனதளவில் கஷ்டங்கள் வரும்போதெல்லாம் இதற்குக் காரணம் நமது பாவ கர்மாதான் காரணம் என்று உணர வேண்டும். அவ்வாறு நாம் உணரும்போது உடலளவில், மனதளவில் வரும் கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனபக்குவம் அவனை அறியாமல் அடைந்து விடுவான். அவ்வாறு மனபக்குவம் அடைந்தவுடன் நாம் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 175 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# நொய்டா முருகன் கோவில் மகா ஸ்கந்த சஷ்டி, சிறப்பாக கொண்டாடப்பட்டது

e-magazine
aanmeegamalar.com




வேத மந்திர முழக்கங்களுக்கு மத்தியில், முதல் நாள் கணபதி ஹோமத்துடன் நிகழ்ச்சி துவங்கியது. ஆறு நாட்களும், ஸ்ரீ கார்த்திகேயனுக்கு சிறப்பு அபிஷேகமும், சஹஸ்ரநாம அர்ச்சனையும், மாலையில் திரிசதி அர்ச்சனையும் நடந்தன. ஆறு நாளில் ஒரு பகுதியாக திருப்புகழ் இசை அன்பர்களின் திருப்புகழ் இசை வழிபாடு மற்றும் ஸ்ரீ கார்த்திகேயனுக்கு லட்சார்ச்சனை, ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயன் கோவில், செக்டர் 62 நொய்டாவில், நடைபெற்றன.

ஒவ்வொரு நாளும் வெவ்வேறு உருவத்தில், ஸ்ரீ கார்த்திகேயன் அலங்கரிக்கப்பட்டார், குறிப்பாக : வெள்ளி கவசம், விபூதி, வீர ரூபா, ராஜ கம்பிரம், அர்த்தநாரீஸ்வரர், சந்தனம், மற்றும் வித விதமான வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம். பக்தர்கள் ஸ்கந்த சஷ்டி கவசம், 'முருக கோஷம்', மற்றும் முருகனின் பாடல்களைப் பாடினர்.

ஸ்கந்த சஷ்டி நாளில் சத்ரு சம்ஹார ஹோமம் நடைபெற்றது. மாலையில், அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ கார்த்திகேயனை, ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஸ்கந்த சஷ்டி வாரத்தின் சிறப்பு அம்சமாக கோயில் வளாகத்திற்குள் பக்தர்கள்





காவடி ஊர்வலம் சென்றனர்.

மேலும் இரண்டு நாட்கள் ஐயப்பன் பஜனை சாஸ்தா பிரீதி நடந்தன. இந்த நிகழ்ச்சியில், விஎஸ்எஸ் பஜன் மண்டலி, நொய்டா மற்றும் டெல்லி ஹம்சத்வானி பஜன் மண்டலி குழுவினர் ஸ்ரீ ஐயப்பன் பஜனைகள் நடத்தினர்.

நொய்டா ஜேஎஸ்எஸ் கல்லூரியின் டீன், டாக்டர் கே.எஸ்.சுஜாதா அனைத்து கலைஞர் களையும் கவுரவித்தார். கோயில் நிர்வாகம் அவருக்கு மகா கும்பாபிஷேக சால்வையும் மற்றும் அர்ச்சனை பிரசாதம் வழங்கியது.

நொய்டாவில் நிலவி வரும் குளிரையும் பொருட்படுத்தாமல் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அண்டை பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்தனர். மகா தீபாராதனை அதைத் தொடர்ந்து மகா பிரசாதம் வழங்கப்பட்டது. அதை தவிர, வட இந்தியாவில் நிலவும் கடுமையான குளிர் காலத்தை கருத்தில் கொண்டு, ஏராளமான கம்பளி போர்வைகள், கோவை கிரீன் கார்டியன் டிரஸ்ட் சார்பில் ஏழை மக்களுக்கு வி.பி.எஸ் விநியோகம் செய்தது. இந்த ஆறு நாள் விழா ஷங்கர் தலைமையில் நடத்திய வள்ளி கல்யாணத்துடன் முடிவடைந்தது.

அனைத்து பூஜைகளும் ஹோமங்களும் வருண் ஷர்மா, கோவில் ஆஸ்தான வாத்தியார்கள்: சங்கர், ஸ்ரீராம், ஆகியோரின் கூட்டு மேற்பார்வையில் செய்யப்பட்டது.

அவர்களுக்கு பிரகாஷ், கணபதி, ஹரி, சீனிவாசன், மணிகண்டன் சர்மா, மோஹித் மிஸ்ரா, மற்றும் ஜெகதீஷ் சிவாச்சாரியார் ஆகியோர் உதவினர். நன்கொடையாளர்கள், ஸ்பான்சர்கள், தன்னார்வலர்கள்,கமிட்டி உறுப்பினர்கள், குறிப்பாக பாலாஜி, ராமசேஷன், ராஜு ஐயர், விஸ்வநாதன், ராஜேந்திரன், வெங்கட்ராமன், அர்ஜுன், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலி மகளிர் பிரிவினர் அனைவருக்கும் கோயில் நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்தனர். அனைத்து பூஜை ஏற்பாடுகளையும் சிறப்பாக கவனித்துக் கொண்ட கோயில் பராமரிப்பு ஊழியர்கள் பகதூர் மற்றும் கைலாஷை பாராட்டினார்கள். 19ஆம் தேதி அன்று ஐயப்பன் பஜனை சாஸ்தா ப்ரீத்தி ஏற்பாடு செய்திருந்த ஸ்ரீதர் ஐயர் குடும்பத்தினரை, கோவில் நிர்வாகம் கௌரவித்தனர்.

வி பி எஸ், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது, நொய்டாவில் உள்ள இரண்டு கோவில்களை நிர்வகித்து வருகிறது:

செக்டார் 22ல் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயில், மேலும் செக்டார் 62ல் சமீபத்தில் திறக்கப்பட்ட ஸ்ரீ விநாயக மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில்.



எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com

# ஆயிரம் தடைவந்தாலும் காக்கும் ஐயப்பன்

## நவீனகால அரக்கர்களால் பக்தர்கள் அவதி

## ஐயப்ப பக்தியில் முக்தி பெற்ற முதல் கன்னிதெய்வம்



அடர்ந்த காட்டில் கொடிய விலங்குகளுக்கு மத்தியில் மோன நிலையில் வீற்றிருக்கும் ஐயப்பனின் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் பெருகிவந்தாலும், ஒவ்வொரு காலகட்டங்களில் ஒவ்வொரு தடங்கல்கள் ஐயப்ப பக்தர்களுக்கு வரும், ஆனால் அதை ஐயப்பன் எளிதாக தீர்த்துவைத்து, பக்தர்களை ஆட்கொள்வதால் மற்ற தெய்வங்களைக் காட்டிலும் ஐயப்ப விரதத்தை விரும்பி ஏற்கும் கூட்டம் வருடந் தோறும் பெருகிகொண்டே இருக்கிறது.

ஒவ்வொருகால கட்டத்தில் ஐயப்ப பக்தர் களுக்கு பிரச்சனை வந்து கொண்டே



e-magazine
aanmeegamalar.com

இருக்கிறது. அந்த வகையில் தற்போது ஆளும் அரசின் ஐயப்ப எதிர்ப்பு போக்கு காரணமாகவும், சபரிமலை நிர்வாக சீர்கேடு காரணமாகவும், ஐயப்ப பக்தர்கள் பூச்சிக்கு சமமாக அவமதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக தமிழக, ஆந்திர, தெலுங்கானா பக்தர்களை மிகவும் இழிவாக நடத்துவதாக பாதிக்கப்பட்ட ஐயப்ப பக்தர்கள் புகார் கூறுகின் றனர்.

ஏற்கெனவே ஐயப்பன் கோவில் நடைமுறை யில் அரசின் வீண் விதாண்டாவாதத்தனமான தலையீட்டால், கடவுள் தேசமாக விளங்கிய கேரளா இயற்கை பேரழிவினால் சிக்கி சின்னா பின்னமாகியபோதிலும், மீண்டும் ஐயப்ப பக்தர்களுக்கு இடையூறு செய்யும் விதத்தில் பல்வேறு செயல்களை செய்து பக்தர்களை நடுக்காட்டில் உணவு தண்ணீர் இன்றி தவிக்கும் நிலைக்கு தள்ளி ஐயப்பன் கோவிலுக்கு பக்தர்கள் வருவதை தடுத்து நிறுத்த முனைவதாக பக்தர்கள் புகார் கூறி வருகின்றனர்.

முக்கியமாக சபரிமலையை மிகப்பெரிய டூரிஸ்ட் ஸ்பாட்டாக மாற்றி அதன்மூலம் கோடி களை அள்ள நினைக்கிறது கேரள அரசு, சபரிமலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பார்க்கிங் ஏரியாவை இன்னும் சீர்செய்யாமல் கிடப்பில் போட்டுவிட்டது.

இதனால் சபரிமலை செல்லும் பக்தர்கள் நிலக்கல்லில் தங்களது வாகனங்களை நிறுத்தி அரசு இயக்கும் அரசு பேருந்தில் ரூ.50க்கு டிக்கெட் வாங்கி செல்லவேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் பல நூறு கோடிகள் வருமானத்தை விட மனமில்லாமல், பக்தர்களிடம் கட்டாய திணிப்பாக வசூலிக்கிறது கேரள போக்குவரத்து துறை.

இதுபோல ஒவ்வொருவிதத்திலும் பக்தர் களிடம் பணவேட்டையையே குறிக்கோளாகக் கொண்டு வசூலிக்கும் நோக்கில் சபரிமலையில் பக்தர்களை வாட்டி வதைக்கும் செயலின் உச்சம்தான் தற்போது சபரிமலையில் பக்தர்க ளுக்கு நடைபெற்று வரும் கொடுமை.

அந்தக் காலத்தில் கடவுள் நம்பிக்கையை சிதைக்க அசுரர்கள் பல்வேறு முயற்சியை மேற்கொள்வார்கள், ஆனால் கடைசியில் கடவுளால் தண்டிக்கப்பட்டு பக்தர்கள் காக்கப் படுவார்கள்.

இதுபோலத்தான் இந்தக் கலியுகத்தில் கடவுள்மீது நம்பிக்கை இல்லாத அரசாங்கம் மற்றும் மாற்றுமதத்தை ஏற்று ஆட்சி செய்பவர்கள் தற்கால பக்தர்களுக்கு இடையூறு செய்து அவர் களை கடவுள் நம்பிக்கையிலிருந்து விலக்க எவ்வளவோ இடையூறு செய்து வருகின்றனர்.

இவ்வளவு கடினமான சூழலில் அரக்கர் களுக்கு நிகரான அரசு மற்றும் அதிகார மையத் தையும் பொருட்படுத்தாமல் மிகச் சிரமப்பட்டு, வேதனைப்பட்டு, அவதிப்பட்டு, அந்த ஐயப்பனை ஒரு சில வினாடிகள் பார்த்தவுடன் மேற்கண்ட துன்பங்கள் மறந்து மனதிற்குள் ஒரு ஆறுதல், நம்பிக்கை, புத்துணர்வு கிடைப்பதாக ஐயப்ப

பக்தர்கள் உணர்ச்சிபூர்வமாக கூறுவதை பார்க்கும்போது, ஐயப்பனின் சக்தி எவ்வளவு பெரியது என்பதை உணர்வு பூர்வமாக அனுபவிக்க இயலுகிறது.

**இதுபோன்ற சூழலில் ஐயப்ப பக்தர்களுக்கு இன்னும் ஊக்கம் தரும் ஒரு நிகழ்வு சபரிமலைக்கு செல்லும் வழியில் நிலக்கல்லுக்கு 15 கிலோ மீட்டர் முன்பே சாட்சியாக திகழுகிறது.**

சபரிமலை ஐயப்பன் மீது தீராத பக்தி கொண்ட ஒரு குடும்பம், அதில் 10 வயதுக்குட்பட்ட ஒரு சிறுமியின் வேண்டுதலை ஏற்று ஐயப்பன் அந்தப் பெண்ணை ஆட்கொண்டு அவரை அந்த இடத்திலேயே கன்னி தெய்வமாக மாற்றிய வரலாற்றை படித்துபாருங்கள், எந்தவித இடையூறும் ஐயப்ப பக்தர்களை ஒன்றும் செய்யாது என்ற உண்மை புரியும்.

சபரிமலைக்கு செல்லும் போது பந்தளம் கொட்டாரம் வாகா பகுதியில், விளக்குவாஞ்சி என்ற இடத்தில் இளையதம்புராட்டிகாவு என்ற கோவில் உள்ளது. மலைப்பிரதேசமாக இருப்பதால், இக்கோயில் சாலையில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்கு கீழ்நோக்கி உள்ளது.

இக்கோவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே திறந்து விளக்கேற்றி வழிபாடு நடைபெறுகிறது.

இக்கோவிலில் ஒருகண்ணிப்பெண் இறைவனை வேண்டி கல்லாக மாறி, பிற்கால சந்ததியினர் அப்பெண்ணை இளையதம்புராட்டி காவு என்ற பெயரில் அம்ம னாக வழிபடுகின்றனர்.

அக்காலத்திலேயே இளம்பெண்கள்சபரி மலை ஐயப்பனை தரிசனம் செய்ய சென்றதில்லை என்பதை நிருபிக்கும் வகையில் இந்த கோவிலின் தலவரலாறு அமைந்துள்ளது.

சரி வரலாற்றை பார்ப்போம்...

பாண்டிய வம்சத்தின் பந்தள நாட்டு அரசனான ராஜசேகரன் என்பவர் பம்பாதீரத்தில் குழந்தையாக இருந்த ஐயப்பனை கண்டெடுத்தார். அவருக்கு குழந்தை இல்லாதமையினால் ஐயப்பனை வளர்க்க உத்தேசித்தார். அதன்படி ஐயப்பன் வரலாறு துவக்கமாக அமைந்தாலும் முடிவில் ஐயப்பன் பிரம்மச்சரிய விரதத்தை மேற்கொண்டு சபரிமலையில் யோக நிலையில் தியானம் செய்வதாக ஐதீகம்.

இந்த வரலாற்றின் படி பாண்டிய வம்சத்தை சேர்ந்த ராஜசேரகர அரசனுக்கு பின்பு வந்த சந்ததியினர் ஐயப்பன் என்ற பெயரை அடைமொழியாக வைத்தே ஆட்சி செய்து வந்துள்ளனர்.

அந்தவகையில்தான் கொள்ளைக்காரனாக இருந்த வாபர் என்ற இஸ்லாமியரை ஐயப்பன் நண்பனாக்கிக் கொண்டதாக வரலாறு திரிக்கப் பட்டது.

அந்த வம்சத்தில் வந்த, ஐயப்பன் என்ற குலப்பெயர் கொண்ட அரசனால் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உண்மையில் ஐயப்பனுக்கும் வாபருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, ஐயப்பன் இருந்த




நிலக்கல்லுக்கு முன்பு 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள விளக்கு வாஞ்சி




e-magazine
aanmeegamalar.com




5 தலை நாகம் குடை பிடித்தது போன்று காட்சியளிக்கும் பாறை



சிலையாக காட்சிதரும் தம்புராட்டி

காலகட்டத்தில் இஸ்லாமியர்களே கிடை யாது என்று வரலாற்று ஆய்வாளர்களின் நிருபிக் கப்பட்ட சான்றாகும்.

அதே சமயம் பல்வேறு நிகழ்வுகள் ஐயப்பனின் கதைகளில் மழுங்கடிக்கப்பட்டுள்ளதும் உண்மை. சபரிமலையைச் சுற்றி உள்ள சிறு சிறு கோவில்களின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், ஐயப்பன் கதையுடன் இணைந்த பல தகவல்கள் கிடைக்கும்.

மாற்று மத வளர்ச்சி, இந்து மத துவேஷம் போன்ற ஒருசில காரணங்களால் வரலாறு மறைக்கப்படுவது வேதனைதான்.

அவ்வாறு மறைக்கப்படும் ஒரு சிறு கோவிலின் வரலாற்றை பார்ப்போம்.

ராஜசேகர மன்னனின் வம்சத்தைச்சேர்ந்த ஒவ்வொருவரும் மன்னனாக முடி சூட்டிக்கொண் டது முதல் தங்களது குலதெய்வமான ஐயப் பனை குடும்பத்துடன் சென்று தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இக்காலத்தில் உள்ளது போன்று எந்தவித அடிப்படை வசதியும் இல்லாததால், சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்ய சென்றால் திரும்புவதற்கு ஒருசில மாதங்கள் கூட ஆகும்.

இதனால் கன்னிப்பெண்களாக பூப்பெய்தும் வயதில் இருக்கும் பெண்களை, சபரிமலைக்கு அழைத்துச் செல்வதை மன்னர் வம்சத்தினர் தவிர்த்து வந்தனர்.

இது நடைமுறையில் இருக்கும்போது, ஐயப்பனின் வம்சத்தை சேர்ந்த ஒரு மன்னரின் குடும்பத்தினர் சபரிமலை நோக்கி தங்கள் பயணத்தை துவக்கினர், குடும்பம் சகிதம் செல்லும் போது பாதி தூரத்தை கடந்தனர், இரவு பொழுதில் ஒரிடத்தில் தங்குவது சூரிய உதயம் ஆனவுடன் பயணம் என்ற வரைமுறையில் பல நாட்கள் காட்டுப்பாதையில் பயணத்தை தொடர்ந்தனர் மன்னர் குடும்பத்தினர்.

மன்னர், அரசி மற்றும் குழந்தைகள், பாதுகாவலர்கள் என்று மிகப்பெரிய கூட்டமாக பயணம் தொடரும்போது, யாரும் எதிர்பாராத விதமாக மன்னரின் உறவுக்கார சிறு பெண் வயது அடையும் பருவம் நெருங்கிவிட்டதை உணர்ந்தாள். விஷயத்தை, மன்னரும் அரசியும் அறிந்து மகிழ்ச்சி அடைந்தாலும், தாங்கள் மேற்கொண்ட பயணத்தில் கண்ணிப்பெண் இடையூராக இருப்பாளே என்று ஒரு பக்கம் துக்கமும் அடைந்தனர்.

இதை அறிந்த அப்பெண், மன்னனிடம்,


“நான் இக்காட்டுப் பகுதியிலேயே தங்கி விடுகிறேன்... நீங்கள் பயணத்தை தொடர்ந்து நமது குலதெய்வமான ஐயப்பனை தரிசித்து வரும்போது உங்களுடன் இணைந்து கொள்கிறேன், அதுவரை நான் இங்கேயே இருக்கிறேன்” என்று சமாதானப்படுத்தி, அரசர் குடும்பத்தினரை அனுப்பி வைத்தாள்.

பயணம் எத்தனை நாளில் முடியும் என்பது யாருக்கும் தெரியாது.


நாட்கள் மெல்ல சென்றது. அந்தப் பெண் ணிற்கு காட்டுவிலங்குகள்மீது ஒருவித பயம் தொற்றிக் கொண்டது. உடனே இறைவனை நோக்கி தவம் செய்ய ஆரம்பித்துவிட்டாள். கடுமையான தவத்தின் பயனாக தன்னைத் தானே கல்லாக மாற்றிக் கொண்டு அந்த இடத்திலேயே தவயோக வாழ்க்கையை தொடங்கி விட்டாள். சபரிமலை பயணம் செய்துவிட்டு திரும்பிய அரசர் குடும்பத்தினர், அப்பெண்ணை விட்ட இடத்தில் சென்று பார்த்தபோது, அப்பெண் கல்லாக மாறி தெய்வ நிலை அடைந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.



தம்புராட்டி கோவிலுக்கு செல்லும் மலையடிவாரத்தின் துவக்கம்



கோவில் அமைந்துள்ள மலையடிவாரம்



சிலையாக காட்சிதரும் தம்புராட்டி



யானை போன்ற அமைப்பில் உள்ள பாறை செடி கொடிகளால் சூழப்பட்டுள்ளது.

உடனே அங்கேயே அப்பெண்ணுக்கு ஒரு ஆலயத்தை நிர் மாணித்து, மலையாள மாதத்தின் துவக்க நாள் அன்று அப் பெண்ணிற்கு மிகச் சிறந்த விழா எடுத்து இன்று வரை கொண்டாடி வருகின்றனர்.

இன்றும் கன்னிப்பெண்கள் பலர் இந்த தம்புராட்டியை தங்கள் குலதெய்வமாகவே வணங்கிவருகின்றனர். இத்திருக்கோவிலை பந்தளம் கொட்டாரம் வாகா டிரஸ்ட் நிர்வ கித்து வருகிறது. சபரிமலையைப் போன்று இத்திருக் கோவிலும் பந்தள மகாராஜா குடும்பத்தினர் வழிபடும் கோவிலாக திகழ்கிறது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் கன்னியாக இன்னும் வலம் வரும் மஞ்சமாதாவிற்கு பின் தன் பக்தியால் சபரிமலை ஐயப்பனால் ஆட்கொள்ளப்பட்ட முதல் கன்னி தெய்வமாக இவர் திகழ்கிறார்.

சபரிமலைக்கென்று ஒரு நியதியை வகுத்த முன்னோர்களின் வாக்கினை காப்பாற்றவும், ஐயப்பனின் யோக நிலை தியானத்திற்கு எந்தவித பாதிப்பும் வராமல் தடுக்க, தன்னைத்தானே கல்லாக்கிக் கொண்ட பெண் தெய்வத்தை, சபரிமலைக்கு செல்லும் வழியில் வாய்ப்பு கிடைத்தால் நாமும் வணங்கிவிட்டு செல்லலாம். மறைக்கப்பட்ட இந்த தம்புராட்டியின் வரலாற்றை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவோம்.

சபரிமலைக்கு செல்லும்போது நிலக்கல் செல்வதற்கு முன்பாக 15 கிலோ மீட்டர் தொலைவில் இந்த கன்னி தெய்வமான இடம் உள்ளது. நிலக்கல்லுக்கு முன்பு விளக்குவாஞ்சி என்று கேட்டால் ஊர் மக்களால் இந்த இடம் அடையாளம் காட்டப்படும். சற்று சறுகலான மலை அவசியம் சென்று பார்க்க வேண்டிய ஐயப்பனின் முதல் பெண் பக்தை.

# பக்தனிடம் இருப்பது பக்தி மனிதனிடம் இருப்பது புத்தி

e-magazine
aanmeegamalar.com

சீடன்: ஏன் உபதேசங்கள் மனதில் ஏறுவதில்லை

ஞானி: ஏதாவது ஒரு பொருளிடம் கடவுள், குரு யாராக இருக்கட்டும், மனதை மொத்தமாக இழந்தால் தான் உபதேசங்கள் புரியும்.

சீடன்: நாங்கள் செய்யும் தவறு என்ன?

ஞானி: மனதையும், பொருளையும் சேர்த்து நினைத்துக் கொண்டிருப்பதால் உப தேசங்கள் உனக்கு கிடைப்பதில்லை.

சீடன்: கடவுளும் கிடைப்பதில்லையே?

ஞானி: மனதை இழந்தால் தான் உன் துன்பம் கடவுளின் கண்களுக்கு தெரியும். கடவு ளும் கிடைப்பான்.

சீடன்: கடவுளிடம் மனிதனுக்கு எதிர்பார்ப்புகள் ஏகமாக இருக்கிறதே?

ஞானி: அடுத்த மனிதனைப் பற்றி உனக்கென்ன? நீ பழைய தலையிலேயே புதிய வாழ்க் கையை எதிர் பார்க்காதே. புதிய தலை யிலே தான் புது வாழ்க்கை கிட்டும்.

சீடன்: சமயத்திலுள்ள பேதங்கள் எங்களைத் தடுக்கிறதே?

ஞானி: மனதை கடவுளிடம் இழந்தால் தான் செயலில் இறங்குவாய். பேதம், அபேதம் என்பதை நீக்குபவனே சக்தி. அதுவே உபாசனை. பேதம் அபதேம் எங்கு உள்ளது என்பதை உணரு பவனே ஞானி.

சீடன்: தேவியை வணங்கினால் பேதம் அகலுமா?

ஞானி: தாராளமாக. சலிக்கின்ற மனதைக் காட்டி சலிக்காத பக்தியைத் தருபவள் சக்தி. பேதங்கள் அழிந்தால் தான் ஏதாவது ஒரு தெய்வத்தின் அருள் கிடைக்கும்.



சீடன்: தேவி உபாசனை, பூஜை செய்யும்போது சிந்தனை தேவையா?

ஞானி: பூஜைக்கு பக்தி தேவை, விருப்பம் தேவை. பூஜை பண்ணும்போது சிந்தனை செய்தால் பூஜை நடக்குமா?

சீடன்: கடவுளுக்கு, மற்ற பொருள்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ஞானி: கடவுளைத் தவிர பிற பொருள்களின் மீது விருப்பம் வைப்பதற்கு முன் யோசனை செய்ய வேண்டும்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சீடன்: கடவுளிடம் விருப்பம் வைக்க முடிவதில் லை?

ஞானி: பக்திக்கு முன் சமயத்திலுள்ள மற்ற விஷயங்களை தெரிந்து கொள்ள மனிதன் முற்படுவதால்.

சீடன்: கடவுளிடம் பக்தன், மனிதன் இவர்களின் நிலை என்ன?

ஞானி: பக்தன் பகவானைப் பார்க்க துடிக்கிறான். மனிதன் கடவுளை பற்றி தெரிந்துக் கொள்ளத் துடிக்கிறான்.

சீடன்: ஏன் இந்த வேறுபாடு?

ஞானி: பக்தனிடம் இருப்பது பக்தி. மனிதனிடம் இருப்பது புத்தி.

சீடன்: ஞானிகள், பக்தர்கள் நிலை எது சுவாமி?

ஞானி:கண்ணன் தான் மாயை. கண்ணனை பக்தி செய்யும் பக்தனுக்கு கடவுள் பூலோக மாயையைக் காட்டி கொடுக்கிறான். அந்த மாயையில் கண்ணனின் நினைவோடு விளை யாடுபவன் பக்தன்.

சீடன்: கேட்க நன்றாக இருக்கிறது ஆனால்?

e-magazine

aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

**ஆசிரியர் குழுவில் இணையலாம்**

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

**ஞானி:** மனிதன் தெய்வீகத்திற்கு மட்டுமே கண்ணன் லௌகீகத்திற்கு இல்லை என்று எண்ணினால் அது தவறு. கண்ணன் எங்கும் வேண்டும்.

**சீடன்:** நம் குரல் கண்ணனுக்கு கேட்குமா?

**ஞானி:** பக்தனாகு, கேட்டுவிடும். அது மட்டுமல்ல, ஆரவாரமான இந்த உலகில் உனக்கு மட்டும் வா, வந்துவிடு என்ற கண்ணனின் குரலும் கேட்கும்.

**சீடன்:** மனிதன், மகான் வித்தியாசம் என்ன?

**ஞானி:** அறியாமல் தூங்குகின்றவன் போகி, மனிதன். அறிந்து தூங்குகின்றவன் யோகி, மகான்.

**சீடன்:** பக்தன் என்பவன் யார்?

**ஞானி:** தன் மனதை தானே கேள்விக் கணைகளால் தொடுத்துக் கொள்ளாதவன் எவனோ அவனே கடவுள் பக்தி கொண்டவன்.

**சீடன்:** கொள்கைகள் என்றால் என்ன?

**ஞானி:** நம் ஆத்மாவோடு, உள்ளத்தோடு உணர்வுடன் உயிருடன் இணைந்து பிரகாசித்து எண்ணும் எண்ணங்களே கொள்கைகள்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**சீடன்:** ஆத்மஞானம் எது?

**ஞானி:** உயிர் சந்தோஷமாக இருப்பதற்கு எது காரணம் என்று தெரிந்து கொள்வதே ஆத்ம ஞானம்.

**சீடன்:** கடவுள் பக்தனிடம் என்ன கேட்கிறான்?

**ஞானி:** பக்தனால் பகவானுக்கு நஷ்டம் ஏதும் வரக் கூடாது என்கிறான் கடவுள். பாபங்கள் விலக உங்கள் காதுகளை குருநாதனிடம் கொடுங்கள் என்கிறான். கைகளைக் கொடுக்க வேண்டும். குரு கரையேறி விட்டவன்.

**சீடன்:** இது ஏன் எல்லோருக்கும் புரிவதில்லை?

**ஞானி:** எல்லா கருத்துக்களையும் உணர மனிதனுக்கு ஒரு வாய்ப்பு, ஒரு காலம் வர வேண்டும்.

**சீடன்:** இந்த தத்துவத்தை யார் பேணிக் காக்கிறார்கள்?

**ஞானி:** தத்துவமே கொள்கையாகும். கொள்கை தத்துவமல்ல. பகவான்தான் தத்துவம் கொள்கையெல்லாம். அதைக் காப்பாற்ற வேண்டிய அவசியமில்லை. உயிரோடு ஆண்டவனை நினைக்கும் மகான்கள் அதை பேணுகிறார்கள். அதனால்தான் ஆண்டவனுக்கு உயிர் உண்டு என்று அவர்களுக்குப் புரிகிறது.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# இந்திய புராணங்களை பிரம்மாண்டமாக கூறும்

# சுரேந்திரபுரி அருங்காட்சியகம்

e-magazine
aanmeegamalar.com




யாதெரி குட்டம் மலைக்கோயில் தெலுங் கானாவின் புதிய திருப்பதியாகும். இது ஆந்திராவிலிருந்து தெலுங்கானா பிரிக்கப்பட்ட பிறகு மிக பிரம்மாண்டமாக தெலுங்கானாவில் கட்டப்பட்ட புதிய கோயிலாகும்.

யாதகிரி கோயிலுக்கு இரண்டு கிலோ மீட்டருக்கு முன்பாகவே உள்ளது தான் இந்த சுரேந்திரபுரி.

12 ஏக்கர் அளவில் கட்டப்பட்டு, 2003ல் திறக்கப்பட்ட இது ஒரு விசித்திரமான மாயாஜால உலகமாகும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக புராண கதைகளை பிரம்மாண்டமான சிலைகள் மூல மாக நமக்கு எடுத்துக் காட்டுகின்ற ஒரு தீம் பார்க் என்று கூறலாம்.

இங்கு பிரம்மாண்டமான கடவுள் சிலைகள் மட்டுமின்றி புராண கதைகளில் வரும் பூதங்கள் அந்த பூதத்தின் வாய்க்குள் நாம் சென்று வர பாதை அமைக்கப்பட்டிருக்கிறது.

நுழைவாயிலில் ஒரே சிலையில் முன்பக்கம் பஞ் சமுக ஆஞ்சநேயரும் பின்புறம் சிவபெருமானும் பிரம்மாண்டமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து நாம் செல்லும் நுழைவாயிலில் பெரிய சிங்கம் வாயை பிளந்திருக்கும் இருபுறமும் தந்தங்களால் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

இங்கு சுற்றுலா பயணமாக சென்று வர கட்டணமாக பெரியவர்களுக்கு ரூபாய் 350ம், குழந்தைகளுக்கு ரூபாய் 300ம் வசூலிக் கப்படுகிறது வசூலிக்கப்படுகிறது.

இதனை தாண்டி சென்றவுடன் ஒரு படகில் முனிவர்களும் விலங்குகளும் செல்வது போன்ற சிலைகள், மனுச்சரித்ரா என்ற புராணக் கதையை கூறுவதை வடிவமைக்கப்பட்டுள்ளது.



e-ma
aanmeegamalar.com

உலகம் அழியும் தருவாயில் முனிவர்கள் விலங்குகளை காப்பாற்றி அழைத்துக் கொண்டு வேறு இடத்திற்கு செல்கின்றனர்.

மற்றொரு தனிப்படகில் ஒரு தம்பதியர் அவர்களது குழந்தையுடன் செல்கின்றனர்.

யானையின் காலை கடிக்கும் முதலை கதையை கூறுகிறது.

கோபியர்கள் குளிக்கும் பொழுது கிருஷ்ண பரமாத்மா அவர்களின் ஆடையை எடுத்து குளித்து வைத்துக் கொள்ளும் கதையை கூறும் வண்ணம் அமைந்துள்ளது.

அடுத்ததாக இருபுறமும் வர்ணம் தீட்டிய இவை இந்தியாவில் புகழ்பெற்ற கோயில்கள், கருவறைகள் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இங்கு திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயில்,

வராக நரசிம்மர் கோயில், என நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்கள் கோபுரங்கள் காட்சியளிக்கின்றன.

எமலோகத்தில் ஒரு மிருகம் மற்றொன்று விழுங்குவது போல உணவு சங்கிலி இங்கு பார்க்கலாம். ஒரு மனிதன் இருந்த பிறகு அவனை எமதர்மராஜாவிடம் அழைத்து வந்து அவரவர்கள் செய்த தவறுக்கு ஏற்ப தண்டனை வழங்கப்படுகிறது.

கைலாய மலையின் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றால் அங்கே தண்ணீர் குடம் இருக்கிறது. அதில் தொடர்ந்து நடந்து சென்றால் கோயில் நகரமே இருக்கிறது.

அதனைத் தொடர்ந்து சிவபெருமானின் சன்னதியில் எலும்பு கூடுகள் ஒற்றைக் கண்ணுடைய மனிதன் தலையை முழுவதும் கண்கள் உடைய மனிதன் என பல சிலைகள் எங்கு இருக்கின்றன.















இங்கு இமயமலையின் மீது சிவபெருமான் நிற்கும் கண்கொள்ளாக் காட்சி தென்படுகிறது.

கிருஷ்ண பகவான் தான் குழந்தையாக இருக்கும் பொழுது பூதங்களை அடக்கிய கண்கொள்ளாக் காட்சி சிலைகள் எங்க நிறுவப்பட்டுள்ளன.

சிம்ம வாகனத்தில் மகிஷாசுரமர்த்தினி அரக்கனை அடக்கும் காட்சி பிரதிபலிக்கிறது.

பிரம்மாண்டமான காலேஜ் சிலை சிவன் சிலை மஹாவிஷ்ணு சிலை என பல சிலைகள் நம்மை வியக்க வைக்கின்றன.

மகாபாரத போர் நடக்கும் இடம் போல காட்சி அளிக்கிறது.

மந்தார மலையை ஆதிசேஷனான பாம்பை வைத்து தேவர்களும் அசுரர்களும் கடைந்து அமிர்தம் எடுக்க காட்சி தெரிகிறது.

சொர்க்கவாசலில் மகாவிஷ்ணு பள்ளி கொண்ட பெருமாளாக மகாலட்சுமியுடன் காட்சி தருகிறார்.

இலங்கையில் அனுமன் தனது மகனை சுருட்டிக்கொண்டு அதன் மேலே அமர்ந்திருக்கும் காட்சி தெரிகிறது.

பாதாள உலகத்தில் பாதாள காளி சிலையை அடுத்து, ஒருபுறம் சிவன் உருவமாகவும். மறுபுறம் சிவலிங்கமாகவும் காட்சி தருகிறார். பாதாள தேவ லோகத்தில் விளக்குகள் அலங்காரத்துடன் தேவதைகள் காட்சி தருகிறனர். கடைசியாக பெரிய அனுமன் சிலையின் கையினால் தேங்காய் பிரசாதம் வழங்கப்படுகிறது.

சௌமியா சுப்ரமணியன்
சென்னை–600117
தொலைபேசி எண்: 9940460969.



e-magazine
aanmeegamalar.com

# கரி நாள் எப்படி கணக்கிடுவது

கரி நாளைப் பற்றி அறிந்து கொள்ள முதலில் திதி, நட்சத்திரம் தொடர்பான கணக்கு பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

சந்திரனை வைத்து சந்திராஷ்டமம் எப்படி கணிக்கப்படுகிறதோ அதே போல சூரியனை அடிப்படையாக வைத்து கரிநாள் கணிக்கப்படுகிறது.

சந்திராஷ்டம நாளில் நல்ல காரியங்கள் செய்வதில்லை, முக்கிய முடிவுகளை எடுப்பதில்லை. அதே போல் கரிநாளில் சுபகாரியங்கள் செய்வதில்லை.

மொத்தமுள்ள 27 நட்சத்திரங்களுள் பரணி, கிருத்திகை, ஆயில்யம், பூரட்டாதி போன்ற சில நட்சத்திரங்களும், 15 திதிகளுள் அஷ்டமி, நவமி போன்ற சில திதிகளும், 7 கிழமைகளுள் செவ்வாய், சனி போன்ற சில கிழமைகளும் திருமணம் போன்ற சுபகாரியங்களுக்கும், நீண்ட தூர பிரயாணம் செய்வது போன்றவற்றுக்கும் விலக்கப்பட வேண்டும், என்கிறது ஜோதிட சாஸ்திரம்.

அதைப்போலவே, ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் சில நாட்களில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் தவிர்க்கப்பட வேண்டும். இதையே கரிநாள் என்று கூறுகிறார்கள்.

கரிநாள் என்பது திதிகள் அல்லது நட்சத்திரங்களின் அடிப்படையில் அமைந்தது அல்ல.

கரிநாள் என்பது ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால் சூரியனின் தீட்சண்யம் அதிகமாக இருக்கின்ற நாள் என்பதே. கரிநாள் என்றால் “நஞ்சு” என்று பொருள்படும்.

அன்றைய தேதியில் சூரியக் கதிர்வீச்சின் தாக்கம், பொதுவாக அந்த மாதத்தில் இருக்க வேண்டிய சராசரியை விட அதிகமாக இருக்கும்.

சூரியனின் தீட்சண்யம் அதிகமாக இருக்கும் பொழுது, நமது உடலில் உள்ள அனைத்து சுரப்பிகளும், ஹார்மோன்களும் சராசரிக்கும் சற்று கூடுதலான அளவில் தூண்டப்படுகின்றன.

இதனால் எளிதில் உணர்ச்சிவசப்படுதல், டென்ஷன் ஆதல், ஆராயாமல் உடனுக்குடன் முடிவெடுத்தல் போன்ற நிகழ்வுகளுக்கு அதிக வாய்ப்புகள் ஏற்படும்.

இது போன்ற காரணங்களால் கரிநாட்களில் சுபகாரியங்கள் செய்வதை தவிர்த்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் கரிநாள்

வரும். ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் இந்த இந்த தேதிகள் கரிநாட்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

சித்திரை முதல் பங்குனி வரை 12 மாதங்கள் உள்ள தமிழ் மாதத்தில் கரிநாட்கள் என்றைக்கு வரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

சித்திரை..............................6, 15
வைகாசி..............................7, 16, 17
ஆனி..................................1, 6
ஆடி...................................2, 10, 20
ஆவணி ..............................2, 9, 28
புரட்டாசி..............................16, 29
ஐப்பசி.................................6, 20
கார்த்திகை...........................1, 10, 17
மார்கழி...............................6, 9, 11
தை....................................1, 2, 3, 11, 17
மாசி ...................................15, 16, 17
பங்குனி..............................6, 15, 19

எந்த ஒரு தமிழ் ஆண்டுக்கும் இது பொருந்தும், ஆகவே, இக்கரிநாட்களில் திரு மணம், கிரகப்பிரவேசம், சீமந்தம், நீண்ட தூர பிரயாணம் போன்றவற்றை செய்தாலோ அல்லது தொடங்கினாலோ, அவை கெடுதலில் முடியும்.

ஆனால், பூஜைகள் ஹோமங்கள் பரிகாரங் கள் ஆகியவற்றை கரிநாட்களில் செய்யலாம். பொதுவாக கரி நாள் அன்று நல்ல காரியங்களைத் துவக்கினால் அது விருத்திக்கு வராது என்று கூறுவர்.

ஆன்மிகமலர்

எனவே, விருத்திக்கு வரக் கூடாது என்று நாம் நினைக்கும் காரியங்களை அன்று நடத்தலாம். உதாரணமாக கடனை அடைக்கும் பணியை மேற்கொள்ளலாம்.

ஏனென்றால் அன்றைக்கு கடனை அடைத் தால் மீண்டும் மீண்டும் கடன் வாங்கும் நிலை மை ஏற்படாது.

– எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265






அடுத்த இதழ்
அயோத்தியா
சிறப்பு செய்திகள்
இடம்பெறும்
உங்களுக்கு தெரிந்த
செய்திகளை
எங்களுக்கு
தெரியப்படுத்தவும்
Ph:9444228203



e-magazine
aanmeegamalar.com


FREE
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
.காம்
170 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
aanmeegamalar.com
eBook
FREEDOWNLOAD
யாகத்தால் மழை வருமா?
முட்டாள்தனமான கேள்விக்கு
அறிவியல் ரீதியான விளக்கம்
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

கிழவியும் பக்தியும்

# சிவனும் பெருமாளும் நிகழ்த்திய லீலைகள்

# கிழவிக்கு பயந்து சந்தமின்றி ஓடும் பெருமாள்

# கிழவிக்காக மண் சுமந்து செல்லும் சிவபெருமான்

மனிதர்களின் பக்திக்கு இறைவன் முக்கியத்துவம் தருவான், இதில் ஏழை, பணக்காரன், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, இளையவர் முதியவர் என்ற பாகுபாடு கிடையாது.


முழுமையான அன்பும் நம்பிக்கையும் மட்டும் இருந்தால் போதும், இறைவன் மனிதர்களின் நிலையை பார்ப்பவன் கிடையாது அவர்களின் ஆழ்மன நம்பிக்கையை மட்டுமே பார்ப்பான்.

இதற்கு மதுரையில் சிவபெருமான் நிகழ்த்திய பிட்டுக்கு மண்சுமக்கும் படலம் தெளிவாக கூறுகிறது. பக்தியில் சிறந்து விளங்கிய கிழவிக்காக, அவள் தயாரித்த புட்டை பெற்றுக் கொண்டு அவளுக்கு பதில் மண்சுமந்து, மன்னனிடம்பிரம்படி பட்ட நிகழ்விலிருந்து, மனிதர்களின் அன்பிற்கு கட்டுப்பட்டு, மனிதர்களுக்கா இறைவனே துன்பத்தை ஏற்றுக் கொள்வான் என்பது நிதர்சனமான உண்மை.

இன்றுவரை, அந்த கிழவிக்காக பிரம்படி பட்ட நிகழ்வை, மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் நடைபெறும் நிகழ்வின் மூலம் உலகம் முழுவதும் தெரிந்து கொள்ள முடிகிறது.

சிவபெருமான் கிழவியின் பக்தியை வெளியுலகிற்கு காட்டியது போன்று திருப்பதி வெங்கடாசலபதியும், தன்மீது அன்பு கொண்ட ஒரு கிழவிக்காக ஒரு லீலையை செய்துள்ளான்.

இன்றுவரை அந்த லீலையின் சாராம்சம் திருமலை வெங்கடாஜலபதிமூலம் தொடர்ந்து



நடைபெற்று வருவதால், பக்தி ஏற்றத்தாழ்வைப் பொறுத்தது கிடையாது, அன்பையும், அர்ப்பணிப்பு எண்ணத்தையும் பொறுத்தது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

பெருமாள் நிகழ்த்திய லீலையை பார்ப்போம்...

திருப்பதி ஏழுமலையான், தடபுடலாக வாத்திய கோஷங்கள் முழங்க வீதியுலா வந்துகொண்டிருந்தார். ஊர்வலம் தெற்கு மாடவீதியில் இருக்கும் அசுவ சாலையை அடைந்தது. வாத்தியங்கள் எல்லாம் திடீரென `கப்சிப்' என்று அமைதியாகிவிட்டன. அதுவரை அசைந்து, அசைந்து எழிலாய் பவனி வந்த பெருமாளும் அந்தச் சாலையைக் கண்டதும் வேகவேகமாய் ஓடிக் கடந்தார். 'அட, ஏன் இப்படி ஏழுமலையான் சந்தடியில்லாமல் அவசரமாகக் கடந்து செல்கிறார்' என்று நினைத்து அருகில் இருப்பவர்களிடம் விசாரித்தால், அதன் பின்னே கர்ணபரம்பரையாகச் சொல்லப்படும் சம்பவம் ஒன்றிருப்பதை அவர்கள் விளக்கினர்.



`கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன்' என்பதைப்போல, `கடனுக்குச் சுண்டல் வாங்கிச் சாப்பிட்டு, அதை அடைக்க முடியாமல் ஓடும் வேங்கடவன் திருவிளையாடல் இது.' ஏழுமலை அடிவாரத்தில் உள்ளது சந்திரகிரி. அந்த சந்திரகிரியில்தான் மங்காபுரம் என்னும் கிராமம் உள்ளது. அங்கு ஆதரவற்ற கிழவி ஒருத்தி சுண்டல் விற்று வாழ்ந்து வந்தாள். நாள்தோறும் ஏழுமலைமீது கூட்டம் கூட்டமாக மக்கள் ஏறிச் செல்வதைக் கிழவி பார்த்துக்கொண்டேயிருந்தாள். ஒருநாள், அப்படி மலையேறும் ஒருவரிடம், ``நீங்கள் எல்லாம் எங்கே செல்கிறீர்கள்?'' என்று கேட்டாள். அதற்கு அந்த ஆள், ``என்ன பாட்டி, இப்படிக் கேட்கிறாய்...மேலே கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான வேங்கடவன் கோயில் இருக்கிறதில்லையா... அவனை தரிசிக்கத்தான் செல்கிறோம்" என்று சொன்னான்.

கிழவிக்கு ஆர்வம் மேலிட, ``அப்படியா, எனக்கும் இங்கு யாரும் இல்லை. நான் அவனை தரிசித்து இந்தப் பிறவி போதும் என்று வேண்டிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். அழைத்துச் செல்வீர்களா?" என்று கேட்டாள். உடனே அந்த நபரும், ``சரி பாட்டி, என்னோடு வா" என்று சொல்லி அழைத்துச் சென்றார். கிழவியும் திருமலை சென்று வேங்கடவனை தரிசித்தாள். அவள் மனம் குளிர்ந்துவிட்டது. ஆனாலும், வேங்கடவனை தினமும் கண்ணாரக் கண்டு தரிசிக்க ஆர்வம் கொண்டாள். தன்னை அழைத்து வந்த மனிதரிடம், ``நான் இங்கேயே தங்கி இறைவனை தரிசித்துக்கொண்டிருக்க விரும்புகிறேன். மேலும், எனக்கு அவனை பிரத்யட்சமாகக் காண வேண்டும் என்று ஆசை" என்றாள்.

``பாட்டி, நாங்கள் சம்சாரிகள். எங்களுக்கு அவனை நேரில் காணும் வழிகள் தெரியாது. ஒருவேளை இந்த மலையிலேயே இருந்துகொண்டு தவம்புரியும் முனிவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டுமானால் தெரிந்திருக்கலாம்" என்று சொல்லி, கிழவியை அந்த முனிவர்கள் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டனர்.

கிழவி அந்த முனிவர்களிடம், ``நான் இங்கேயே உங்களுடன் தங்கியிருந்து உங்களுக்குப் பணி விடை செய்ய விரும்புகிறேன்'' என்று கூறினாள். முனிவர்களும் சம்மதித்தனர்.

aanmeegamalar e-magazine

கிழவியும் அங்கேயே தங்கிக்கொண்டு, முனிவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்துவந்தாள். `தனக்கு என்ன வேண்டும்' என்று முனிவர்களிடம் அவள் சொல்லவேயில்லை. சில நாள்கள் கழித்து முனிவர்களும் அவளிடம் சென்று, ``அம்மா, தங்களுக்கு என்ன வேண்டும்?''என்று கேட்டனர்.

கிழவியும், ``தனக்கு வேங்கடவனை கண்களால் பிரத்யட்சமாகக் காண வேண்டும். அதற்கு உதவ முடியுமா?'' என்று கேட்டாள்.

முனிவர்களுக்கோ ஆச்சர்யம். இதுவரை தவமியற்றி வரும் தங்களுக்கே தரிசனம் கொடுக்காத பெருமாள், எதுவும் அறியாத கிழவிக்கு எவ்வாறு தரிசனம் கொடுப் பார் என்று எண்ணினர். ஆனபோதும் கிழவியின் நம்பிக் கையைக் கெடுக்காமல், ``அம்மா, கோயிலுக்குத் தெற்கே இருக்கும் புளியமரத்தின் அடியில் ஒரு புற்று உள்ளது. பெருமாள் அதனுள் அமர்ந்துதான் தவம் செய்துவந்தார். பிறகு பத்மாவதித் தாயாரை மணந்துகொண்டு திருமலை யில் கோயில் கொண்டுவிட்டார். நீ அவர் தவமிருந்த புற்றுக்கு அருகில் சென்று அமர்ந்துகொண்டு, பெருமாளை தியானித்துக் கொண்டிருந்தால், உனக்கு அவனுடைய தரிசனம் கிடைக்கக்கூடும்'' என்று கூறினார்கள்.

அவர்கள் சொன்னபடியே கிழவியும் புற்றுக்கு அருகில் சென்று அமர்ந்துகொள்ளத் தயாரானாள். ஆனால். பெரு மாளை தரிசிக்க வெறும் கையுடன் போகக்கூடாது என்று நினைத்து, சுண்டல் செய்து எடுத்துக்கொண்டு சென்றாள்.

ஒவ்வொருநாளும் சுண்டல் செய்து எடுத்துக்கொண்டு புற்றின் அருகே சென்று அமர்ந்துகொள்வாள். வேங்கடவன் வருவானா என்று காத்திருப்பாள். கிழவியின் வைராக்கியத்தைக் கண்டு மனமிரங்கிய பெருமாள் ஒருநாள், வயோதிக வேடம் கொண்டு புற்றிலிருந்து வெளியே வந்தார். கிழவியைக் காணாததுபோல நடந்தார். உடனே கிழவி ஓடிச்சென்று அவரை நிறுத்தினாள். அவரின் திவ்யமுக தரிசனத்திலேயே அவர் யார் என்று புரிந்துவிட்டது.





e-magazine
malar.com

``ஐயா, உங்களைக் கண்டால் பசியால் வாட்டம் கொண்டவர்போல் இருக்கிறது. இந்தச் சுண்டலை உண்டு பசியாறுங்கள்'' என்றாள்.

பெருமாளும் அவள் கையால் தந்த சுண்டலை சுவைத்து உண்டார். சுண்டலை உண்டபின்பு கிளம்பப் போன பெருமாளைக் கிழவி தடுத்து,

``சுண்டலுக்குப் பணம்? " என்றாள்.

``என்னது பணமா, சொல்லவேயில்லையே... நானே கடன்பட்டுக் கல்யாணம் செய்து இன்று வரை அதற்கு வட்டி கட்டிக்கொண்டு திரிகிறேன். என்னிடம் ஏது பணம்? " என்று கேட்டார்.

கிழவியோ, பெருமாள் தன்னிடம் சிக்கிக்கொண்டதை அறிந்து, ``அய்யா, இந்த உலகத்தில் பணம் இல்லாது ஏதேனும் கிடைக்குமா?'' என்று கேட்டாள். உடனே பெருமாளும், ``சரி, நாளை வந்து தருகிறேன்'' என்று சொல்லிப் போனார் மலையப்ப சாமி.

மறுநாளிலிருந்து பெருமாள் வரவேயில்லை. ஆனால், கிழவிக்கு வந்தவர் பெருமாள்என் றும், அவர் தனக்குத் தரப்போகும் பணம் வைகுண்டப் பதவி என்பதையும் அறிந்திருந்தாள். ஆனால், இன்னும் திருமலையிலேயே வாசம்செய்யும் வேங்கடவனோ, அந்தக் கிழவிக்குத் தர வேண்டிய கடனுக்கு அஞ்சுபவர்போலவும், அதனால், அவளிருக்கும் திசைக்குச் செல்லும்போதெல்லாம், மறைந்து ஓடுவதுபோலவும் விளையாடிக் கொண்டிருந்தார்.

கிழவி ஒரு நாள் வைகுண்டப் பதவியையும் பெற்றுவிட்டாள். ஆனபோதும் பெருமாள் கிழவிக்கு அருள்பாலித்த திருவிளையாடலை நினைவுகூரும் விதமாக, இன்றும் வீதியுலா எழுந் தருளும் போது, கிழவி இருந்த இடத்தில் சத்தமின்றி கடன்பட்ட வன்போல மறைந்து செல்வது தொடர்கிறது.

இந்தச் சம்பவத்தை பிரம்ம வசிஷ்ட பீட பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீமான் அரங்கப் பிரகாச சுவாமிகள் கவியாக எழுதினார். அதில் கிழவி, தனக்கு வரவேண்டிய கடனுக்காக பெருமாளிடம் வாதம் செய்வதுபோல அந்தப் பாடல் அமைந்திருக்கும். அந்தப் பாடலை எம்.ஹரி பூஷணம் எளிய தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

"நாளை என்று நிதம் கெடுவுகள்
சொல்லி நீ
வருடக் கணக்குகளாய் ஆக்கிவிட்டாய்
ஏழையாகிய என்னை
ஆட்கொண்டருளாமலே
பாராமுகம் செய்வது நியாயமோ''

– என்று கிழவி கேட்க

"அன்புடன் பக்தர்களை காத்து
ரட்சித்ததுபோல
கலியுகமந்திய காலத்திலே
இன்பமாய் கொண்டாடி அசலையும்
வட்டியையும்
காலந்தவறிடாமல் கொடுப்பேனம்மா''

என்று பெருமாள் பதில் சொல்வதுபோலக் கவி செய்திருக்கிறார் அரங்க பிரகாசர்.

கடவுளின் மீது பக்தி கொண்டால், பக்தர்களை உலகிற்கு எந்த வகையிலாவது உலகிற்று அறிமுகம் செய்ய இறைவன் லீலைகளை நிகழ்த் துவான் என்பதற்கு உதாரணம்தான், பிட்டுக்கு மண் சுமந்த கிழவி யும், சுண்டல் கொடுத்து பெரு மாளை கடன்காரனாக மாற்றிய கிழவியும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.




e-magazine
aanmeegamalar.com

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சார்பில் வெளியிடும்

23.01.2024
அன்று வெளிவரும்...

# தைப்பூசம் திருவிழா
# ஆறுபடையப்பன் சிறப்பிதழ்

48 பக்கம்

- ஆறுபடைமுருகன் ஸ்தலங்கள் சிறப்பு
- 12 ராசிக்குரிய முருகன் கோவில்கள்
- மூன்றாம் படைவீடு ரகசியம்
- முழங்கால் வலி தீர்க்கும் முருகன்
- செம்பு முருகனின் சிறப்புகள்





இந்த ஆண்டின் கிரிவல நாட்கள்,
பிரதோஷ நாட்கள், போன்றவற்றின்
தொகுப்பு கொண்ட பொக்கிஷம்
புத்தகம் தேவைப்படுவர்கள்,
விளம்பர முகவர்கள்
தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

**Ph:9994323622 / 9994162182**

9444228203